Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-26 | 11-08-2005 | வியாழக்கிழமை | ஓசை-174


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள் .
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

# அம்பாறை-காஞ்சிரங்குடாப்பகுதியில் இரு போராளிகள் சுட்டுக்கொலை!

## ஆயுததாரிகள் படைமுகாமிற்குள் தப்பி ஓட்டம்

(அம்பாறை)

***அம்பாறையில் நேற்றுக்காலை 7.30 மணிக்கு போராளிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் செயலகத்தில் இருந்து அரசியல் பணிக்காக திருக்கோவில் நோக்கி சென்றுகொண்டிருந்த இரு போராளிகளே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான காஞ்சிரங் குடாவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.***

வான் ஒன்றில் வந்த சீருடை அணிந்தவர்கள் இத்தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

திருக்கோவில் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த ரமேஸ், சுஜிவேந்தன் ஆகிய போராளிகள் இதில் வீரச்சாவடைந்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள அம்பாறை மாவட்டத்தின் பகுதிக்குள் அவர்களால் அல்லது அவர்களின் துணையுடன் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. போராளிகள் சுட்டுக்கொல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் கொல்லப்படும் சம்பவங்களை இனிமேலும் சகித்துக்கொள்ள முடியாது!

### -ஹக்ரப் ஹொக்லண்டிடம் புலிகள் வலியுறுத்து

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்றுக்காலை 10 மணிமுதல் 11 மணிவரை சந்திப்பொன்று அம்பாறை மாவட்டம் பாவட்டாவில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் சார்பில் அதன் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் அம்பாறை மாவட்ட தலைவர் ஆகியோரும், விடுதலைப் புலிகள் சார்பில் மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ராம், படையணித் தளபதி ஜனார்த்தனன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பளார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதிக்கான அதிகாரங்களை தேர்தலுக்கு முன் குறைக்க முயற்சி!

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் சனாதிபதியிடம் உள்ளஅதிகளவான அதிகாரங்களை இரத்துச்செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காகப் பல பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் சட்டத்தரணிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் சனாதிபதி ஒருவரின் நிறைவேற்று அதிகாரங்கள் குறித்து மக்களுக்கு தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகளை இந்த இணைந்த அமைப்பினர் மேற்கொள்ளவுள்ளனர் இதனையடுத்து குறித்த நிறைவேற்று அதிகாரங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

கடந்த மூன்றாம் திகதியன்று வாகன விபத்தொன்றின்போது காயமடைந்திருந்து சிகிச்சை பெற்றுவந்தபோது கடந்த ஏழாம் திகதி அன்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை - காவலன்

(கணபதிப்பிள்ளை-இராஜேந்திரன் 35 ஆம் கொலனி, வைக்கலை, அம்பாறை, த.முகவரி தாண்டியடி, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வீரச்சாவு

கடந்த 29ஆம் திகதி தேச விரோதிகளின் தாக்குதலில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப். அழகுமதியன்

(வினாயகலிங்கம் விஜயகுமார் எட்டாம் கட்டை உன்னிச்சை மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இம்மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் சிறப்புற நடந்த பொன்விழா நிகழ்வு



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று மத்திய கல்லூரி வளாகத்தில் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தால் அமைக்கப்பட்ட புதிய கலாச்சார மண்டபத்தை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து மண்டபத்தில் கல்லூரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பளை-பச்சிலைப்பள்ளி மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பம்

பளைப் பகுதியில் பச்சிலைப் பள்ளி பிரதேச மக்களுக்கான தற்காப்பு படைப்பயிற்சிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பளை மத்திய விளையாட்டு மைதானத்தில் மாலை நான்கு மணியளவில் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பயிற்சியில் ஆயிரக் கணக்கான பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்பயிற்சியினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலரும்

(12ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ்மக்களின் இறைமைக்கும் கௌரவத்திற்குமான வழிவகைகளை எமது கையில் எடுத்தே தீருவோம்!

### - புதுக்குடியிருப்பு பொன்விழா நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர்

(புதுக்குடியிருப்பு)

எங்கள் தேசத்தில் எங்களுடைய மக்கள் இறைமையோடும் கௌரவத்தோடும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கான வழிவகைகளை எமது கையில் எடுத்தே தீருவோம். இதை ஒருபோதும் சிங்களதேசம் தடுக்க முடியாது. தடுக்க முனைந்தால் இலங்கைத்தீவு ஒருபோதும் அமைதிப்பூங்காவாக இருக்க முடியாது.

இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிப் பொன்விழா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;இன்றைய இந்த நிகழ்வு எங்களுக்கு பெரும் மகிழ்வைத் தந்திருக்கின்றது. எமது தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனையின் வெளிப்பாடான கல்வி மனித வாழ்விற்கும் மனித மேம்பாட்டிற்கும் ஆதாரமானது என்ற அவருடைய சிந்தனை வழிகாட்டலினூடாக இன்று இந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வு கொண்டாடப்படுகின்றது.

மக்கள் அனைவருமே மகிழ்வோடும் நிறைவோடும் தங்களுடைய சொந்த நிகழ்வு போன்று நின்று நடத்துவதைப் பார்க்கின்றபோது எங்களுடைய தலைவருடைய சிந்தனைக்கும், வழிகாட்டலுக்கும் ஏற்ப எதிர்காலத்தில் தமிழீழ தேசம் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும். வளர்ச்சி அடையவேண்டும் என்ற அவருடைய சிந்தனைக்கு வடிவம் கொடுக்கின்ற முன்னுதாரணமான செயற்பாடாகத்தான் இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்வை நாங்கள் பார்க்கின்றோம்.

இந்தப் பாடசாலையின் மேம்பாட்டிற்காக

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இராசரத்தினம் அமிர்தலிங்கம் 21, கரம்பைக்காடு வவுனியா இவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் தவறிவிட்டது-கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (சி.12515)

## சூரிய மின்கலம் வழங்கப்பட்டது

த.பு. வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் மந்துவில் கிராமத்தில் அமைந்துள்ள திருமுகபுர முன்பள்ளியில் மாலை நேரக் கல்வி கற்பித்தலுக்காக மெதடிஸ்த திருச்சபையின் நிதியுதவியுடன் நேற்று முன்தினம் சூரிய மின்கலம் வழங்கப்பட்டது.

# திருமுறிகண்டிப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம்

(அலுவலக செய்தியாளர்)

வட பிராந்திய பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று நேற்றுக் காலை 10.00 மணியளவில் திருமுறிகண்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை செலான் வங்கி முகாமையாளர் ஞானபண்டிதர் கிளி. மாவட்ட தமிழ்ச் சங்கத்தலைவர் முன்னாள் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் ஏற்றிவைக்க கூட்டுறவுக் கொடியினை கரைச்சி வடக்கு ப.நோ கூ சங்க முகாமையாளர் எற்றிவைத்தார். தொடர்ந்து பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. பெயர்ப் பலகையினை தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பிரியன் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து வடபிராந்திய பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் இராசரத்தினம் அவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து எரிபொருள் நிரப்பு இயந்திரத்தினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் இயக்கி ஆரம்பித்து வைத்தார். (தீ)

## நல்லூர்க்கந்தன் கொடியேற்றம் நேற்று சிறப்புற இடம்பெற்றது

(நல்லூர்)

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுப் பகல் பத்து மணிக்கு மிகவும் சிறப்பான முறையில் பக்திப்பரவசமான கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகியது.

கொடியேற்ற நிகழ்வில் ஆயிரக் கணக்கான அடியவர்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து சமுகம் கொடுத்திருந்தார்கள்.

இதேநேரம் ஆலயத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் அங்கப்பிரதட்சை மற்றும் அடியளித்தலிலும் ஈடுபட்டார்கள்.

ஆலய சுற்றாடலில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினரும் மற்றும் மக்கள் நலன்புரி சங்கம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியினரும் பாதுகாப்புக் கடமையிலும், அவசர உதவிகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

நலலூர் பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர்கள், சிறப்புச் செயலணி அலுவலகம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (41)

## கணேசபுர முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

மேற்படி விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியினை வெள்ளாங்குளம் அரசியல் துறைப் பொறுப்பாளர் வசந்தன் ஏற்றி வைத்தார், பாடசாலைக் கொடியினை கணேசபுர முன்பள்ளி ஆசிரியர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து முன் பள்ளி சிறார்களால் ஒலிம்பிக் தீபம் ஏற்றி வரவேற்பு உரையுடன் விளை யாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின நிறைவில் பரிசில்களும் வழங்கி வெற்றி பெற்ற வீரர்கள் கௌர விக்கப்பட்டனர்.


## சாவு அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தையா

யாழ்ப்பாணம், புங்குடுதீவு, 7 ஆம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 780, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது 45/2 கொட்டாஞ்சேனை, கொழும்பு 13இல் வசித்து வந்தவருமாகிய சுப்பிரமணியம் கந்தையா 09.08.2005 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார். இவர் காலம் சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், இராசம்மா (கொழும்பு), நவலட்சுமி (கிளி), கொழும்பு பொன்னுத்துரை (ஜேர்மனி), மதியழகன் (கனடா), மணியழகன் (சுவிஸ்), அன்பழகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செவ்வரத்தினம்(கொழும்பு), சிவகுரு(முன்னாள் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ சங்க கொள்வனவு உத்தியோகத்தர்), சசிகலா (கனடா), சிவராஜமலர் (சுவிஸ்) சந்திரா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஆறுமுகம் (வட்டக்கச்சி), காலஞ்சென்ற சின்னத்துரை (புங்குடுதீவு), காலஞ்சென்ற சிவக்கொழுந்து (வட்டக்கச்சி), நல்லம்மா (திருவையாறு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.08.2005 சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:–
உறவினர்கள்,
ஆ.கனகலிங்கம் (மருமகன்),
வட்டக்கச்சி.

(6532)

## சாவு அறிவித்தல்

### அமரர் தர்மராசா சிவானந்தம்

அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆங்கில ஆசிரியரும் கௌரவநூலகருமான அமரர் தர்மராசா சிவானந்தம் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு சென்றும் சிகிச்சை பலனளிக்காததனால் 08.08.2005 அன்று அகாலச்சாவடைந்துள்ளார். அன்னார் தர்மராசா ஜீவபாஸ்கரி தம்பதிகளின் மகனும் வஜிதா (ஜேர்மன்), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியை 11.08.2005 இன்று பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:-
பழையமாணவர் சங்கம்,
இடைக்காடுவாழ் மக்கள்.

(6533)

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்
# சிறப்புப் பேருந்துப்பணி

15.08.2005 ஆம் நாள் நடைபெறும் மடு அன்னை விழாவினை முன்னிட்டு தமிழீழப் போக்குவரவுக் கழகத்தினால் 12.08.2005,13.08.2005,14.08.2005 ஆகிய மூன்று நாட்களும் கீழ் குறிப்பிட்ட இடங்களிலிருந்து மடு கோவில் வரை சிறப்புப் பேருந்துப்பணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**12.08.2005 வெள்ளி**

(01) முகமாலையிலிருந்து காலை 09.30 மணிக்கு தொடங்கி பூநகரி ஊடாக மடு சென்றடையும்.

**13.08.2005 சனி**

(01) முகமாலையிலிருந்து காலை 09.30 மணிக்கு தொடங்கி பூநகரி ஊடாக மடு சென்றடையும்.

(02) வட்டக்கச்சி சூசையப்பர் கோவிலடியிலிருந்து காலை 07.00 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி வந்தடைந்து கிளிநொச்சியிலிருந்து காலை 08.00 மணிக்கு புறப்படடு கந்தபுரம்- செயபுரம் ஊடாக மடு சென்றடையும்.

(03) வெள்ளாங்குளத்திலிருந்து பகல் 02.00 மணிக்கு புறப்பட்டு நாச்சிக்குடா, விடத்தல்தீவு ஊடாக மடு சென்றடையும்.

(04) அலம்பில் அந்தோனியார் கோவிலடியிலிருந்து காலை 07.00 மணிக்கு புறப்பட்டு முல்லைத்தீவு- வலையன்மடம்- இரணைப்பாலை- புதுக்குடியிருப்பு வந்து அங்கிருந்து காலை 10.00 மணிக்கு புறப்பட்டு பரந்தன் ஊடாக மடு சென்றடையும்.

**14.08.2005 ஞாயிறு**

(01) முகமாலையிலிருந்து காலை 09.30 மணிக்கு தொடங்கி பூநகரி ஊடாக மடு சென்றடையும்.

(02) வட்டக்கச்சி சூசையப்பர் கோவிலடியிலிருந்து காலை 07.00 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி வந்தடைந்து கிளிநொச்சியிலிருந்து காலை 08.00 மணிக்கு புறப்பட்டு கந்தபுரம்- செயபுரம் ஊடாக மடு சென்றடையும்.

(03) வெள்ளாங்குளத்திலிருந்து பகல் 02.00 மணிக்கு புறப்பட்டு நாச்சிக்குடா, விடத்தல்தீவு ஊடாக மடு சென்றடையும்.

(04) அலம்பில் அந்தோனியார் கோவிலடியிலிருந்து காலை 07.00 மணிக்கு புறப்பட்டு முல்லைத்தீவு- வலையன்மடம்- இரணைப்பாலை- புதுக்குடியிருப்பு வந்து அங்கிருந்து காலை 10.00 மணிக்கு புறப்பட்டு பரந்தன் ஊடாக மடு சென்றடையும்.

**குறிப்பு:–**

(01) 13.08.2005,14.08.2005 ஆகிய இரு நாட்களும் காலை 06.00 மணி தொடக்கம் இரவு 09.00 மணி வரை உயிலங்குளத்திலிருந்து புறப்பட்டு பெரிய பண்டிவிரிச்சான் -சின்னப்பண்டிவிரிச்சான்- தட்சனாமருதமடு -மடு வரை தொடர்ந்து குறுகிய பணி நடைபெறும்.

(02) முல்லைத்தீவிலிருந்து-மடுவிற்கு காலை 06.00 மணிக்கு புறப்படும் வழமையான பணியும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12497)

# பிரதமர் ரொனி பிளேயரின் நிர்வாகம் தீவிரவாதிகளிடம் மென்மைப்போக்கை கடைப்பிடிக்கிறது – முஷாரப்

(லண்டன்)

**இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரின் நிர்வாகம் தீவிரவாதிகளிடம் மென்மையாக நடந்து கொள்வதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இங்கிலாந்தில் கடந்த மாதம் ஏழாம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் 56இற்கு மேற்பட்டடோர் பலியா னார்கள். இந்தச் சம்பவத்தில் தற்கொலைப் படை தீவிரவாதிகளாகச் செயற்பட்ட நான்கு பேரில் இரண்டு பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தாக்குதல் நடத்துவதற்கு முன்பு பாகிஸ்தான் சென்று அங்கு ஆயுதப் பயிற்சி பெற்றுத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தெரிய வந்ததும் இந்தத் தாக்குதலில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் முக்கிய பங்காற்றியிருப்பதாக இங்கிலாந்து குற்றம் சாட்டியது.

இதைப் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஏற்கனவே மறுத்து விட்டார் பி.பி.சி தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்தபோதும் இதை அவர் மறுத்துள்ளார்.


லண்டன் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தான் ஆதாரமாக இருந்துள்ளது என்று கூறப்படுவது தவறு. இந்தக் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது.

லண்டனில் குண்டு வைத்த இரண்டு பேர் பாகிஸ்தான் வந்தது உண்மை. அவர்கள் அங்குள்ள சிலருடன் தொலைபேசியில் பேசினார்கள். அவர்கள் யார் யார் என்பதைக் கண்டு பிடிக்க அதிகாரிகள் முயற்சிசெய்து வருகிறார்கள்.

லண்டனில் குண்டு வைத்தவர்கள் பாகிஸ்தானியர்கள் தான் என்றாலும், அவர்கள் வளர்ந்ததும், 20 ஆண்டுகள் வாழ்ந்ததும் இங்கிலாந்தில் தான். அவர்களைத் தீவிரவாதிகளாக மாற்றியது இங்கிலாந்துதான்.

இங்கிலாந்திலுள்ள தீவிரவாதிகளிடம் ரொனிபிளேயர் அரசு மிக மென்மையாக நடந்து கொள்கிறது.

பிற மதத்தினரிடம் வெறுப்பை உமிழும் வகையில் மசூதிகளில் மதப்பிரசாரம் செய்யும் மத குருமார்களிடமும் இங்கிலாந்து அரசு மென்மையாக நடந்து கொண்டு வருகிறது.



அவர்கள் மீது இங்கிலாந்து அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சொந்த நாட்டின் நலனைக் கருதியாவது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற மதத்தினரிடமும், அரசாங்கங்களிடமும் வெறுப்பை உமிழ்வதற்காக மசூதிகள் கட்டப்படவில்லை. இப்படி வெறுப்பைக் காட்டுவதை முஸ்லிம்கள் கைவிட வேண்டும்.

லண்டன் குண்டுவெடிப்பில் ஈடுபட்டவர்கள் வெடிகுண்டு நிபுணர்கள் இல்லை. யாரோ ஒருவர் அவர்கள் பின்னால் இருந்து மூளையாகச் செயற்பட்டு இருக்கிறார். இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார்.

## அமெரிக்காவின் சிறந்த மருத்துவராக கருத்துக் கணிப்பில் இந்திய வைத்தியர்

(நியோர்க்)

அமெரிக்காவிலுள்ள ஒரு மருத்துவ நிறுவனம் அங்குள்ள வைத்தியர்களில் சிறந்தவர்கள் யார் என்பது பற்றிப் பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தியதில் இந்திய வைத்தியர் சிறந்தவர் எனத் தெரிவாகியுள்ளார்.

ஒரு இலட்சம் வைத்தியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்களில் யாரிடம் சிகிச்சை பெற நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் செல்வீகள் என்று கருத்துக் கேட்கப்பட்டது.

இதில் முதல் இடத்தைப் பிடித்த வைத்தியர்கள் வரிசையில் இடம்பிடித்தவர் ஒரு இந்தியர். அவரது பெயர் தத்தாத்ரேய நொரி. இவர் புற்றுநோய சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றவர். ஏற்கனவே பல மாதங்களுக்கு முன் பெண்கள் பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பிலும், தத்தாத்ரேய நொரி சிறந்த வைத்தியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் நியோர்க்கிலுள்ள கதிர் இயக்க ஆராய்ச்சி மைய தலைவராகவும் இருக்கிறார்.



**நேற்று முன்தினம் பாக்தாத்தில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் பலியானவரின் உடலை இராணுவ அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றும் அமெரிக்கப்படையினர். இச் சம்பவத்தில் பொதுமக்கள் ஐந்து பேர் பலியாகி, 11 பேர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் அமெரிக்கப்படைகள் பலியானது பற்றிய உடனடித் தகவல்கள் வெளிவரவில்லை.**

## 93 இலட்சம் கிலோமீற்றர் பயணித்த டிஸ்கவரி விண்கலம்



யூலை 26ஆம் திகதி புறப்பட்ட டிஸ்கவரி விண்கலம் புவி வட்டப்பாதையில் 219 முறை பறந்து ஏறத்தாழ 93 இலட்சம் கிலோமீற்றர் தூரம் பயணித்துள்ளது. இந்த விண்கலம் தரை இறங்கும்போது மணிக்கு 322 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடு பாதையை தொட்டது. தொடர்ந்து பரசூட்களின் உதவியுடன் அதன் வேகம் குறைக்கப்பட்டு லாவகமாக நிறுத்தப்பட்டது.

## மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் 40 நேபாள இராணுவத்தினர் பலி

நேபாளத்தில் இராணுவத்துடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 26 மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்ட அதேவேளை 40 இராணுவத்தினர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுர்கெட் ஜீம்லா என்ற இடத்தில் நடந்த தாக்குதலில் 250 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 159 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். 50 பேரைக் கடத்திச் சென்றுவிட்டதாவும் அவர்கள் கூறியுள்ளனர்.

40 இராணுவத்தினர் உடல்கள் கைப்பற்றப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது.

## டிஸ்கவரி விண்கலத்தின் வெற்றிப் பயணத்துக்கு கல்பனா சாவ்லாவின் தந்தை மகிழ்ச்சி

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நொருங்கி விழுந்த கொலம்பியா விண்கலத்தில் பயணம் செய்து பலியான இந்திய வீராங்கனை ,கல்பனா சாவ்லா. அரியானா மாநிலத்திலுள்ள அவருடைய சொந்த நகரான கர்னால் டிஸ்கவரி விண்கலத்தின் வெற்றிகரமான பயணத்தால் மகிழ்ச்சியில் திளைத்தது.

கல்பனாவின் தந்தை பி.டி. சாவ்லா எனது மகிழ்ச்சியை விபரிக்க வார்த்தையில்லை என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். "கொலம்பியா" விண்கலம் அளித்த அதிர்ச்சியில் இருந்து இதன் மூலம் மீண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'டிஸ்கவரி' யின் வெற்றிகரமான பயணத்துக்காக, கர்னால் நகரைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் பிரார்த்தனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## யப்பான் பாராளுமன்றத்தேர்தல் செப்ரெம்பர் 11 இல் நடைபெறும்?

(டோக்கியோ)

யப்பான் பாராளுமன்றத்துக்குத் திடீர் தேர்தல் நடத்த பிரதமர் கொய்சுமி முடிவு செய்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைக்க அவருக்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்து விட்டது. வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம்திகதி தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தபால் துறையை தனியார் மயமாகக் கொண்டு வரப்பட இருக்கும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு தோல்வி அடைந்ததால், தேர்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.



**டெக்சாஸில் நடைபெற்ற பொருளாதாரக் கொள்கையாளர் மாநாட்டில் அமெரிக்காவின் பொருளாதாரம் ஸ்திர நிலையிலிருப்பதாகத் தெரிவித்து உரையாற்றும் அதிபர் ஜோர்ஜ்புஷ்.**

## லண்டன் வெடிகுண்டு தாக்குதல் எதிரொலி இந்திய வம்சாவளி வைத்தியர் மீது தாக்குதல்

லண்டன் வெடிகுண்டு தாக்குதலுக்குப் பின் இன ரீதியான தாக்குதல்கள் அதிகரித்துவிட்டன. இந்திய வம்சாவளியைச்சேர்ந்த வைத்தியர் ஒருவர் மீது பயங்கர கல்வீச்சு நடந்துள்ளது. படுகாயம் அடைந்த வைத்தியர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

லண்டனில் கடந்த மாதம் ஏழாம் திகதி மற்றும் 21 ஆம் திகதியில் வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. தீவிரவாதிகள் பலர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் முஸ்லிம்கள் என்பதால் லண்டனில் வசிக்கும் மற்ற முஸ்லிம்கள் மீது வெள்ளை இனத்தவர்கள் கடும்தாக்குதல் நடத்தினர். மசூதிகளுக்குத் தீ வைக்கப்பட்டது. சீக்கியர்களும் முஸ்லிம்களைப் போலவே தோற்றத்துடன் இருப்பதால், அவர்கள் மீதும் குருத்தவாரா மீதும் தாக்குதல் நடந்தது.

இன ரீதியான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த பிரிட்டன் பொலிசார் கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். எனினும் பிரிட்டனின் தென்கிழக்கில் சாத்தம் என்ற பகுதியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் மீது நேற்று முன்தினம் வெள்ளை இன இளைஞர்கள் கடும் தாக்குதல் நடத்தினர். யாஷன் மகராஜ். (வயது28) என்ற டாக்டர் மீது கல்வீச்சு நடத்தியதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியரை மிகக்கேவலமான முறையில் திட்டி வெள்ளை இன இளைஞர்கள் பெரிய பெரிய கற்கள் மூலம் தாக்கி உள்ளனர் என்று மருத்துவமனை நிர்வாகத்தினர் கூறினர்.


## சீனாவில் குளோனிங் பன்றிக்குட்டி


(பீஜிங்)

உடல்செல்களை எடுத்து அதன் மூலம் தாயைப் போலவே புதிய உயிரினங்களை குளோனிங்முறை மூலம் உருவாக்குவதில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டி வருகின்றார்கள்.

குளோனிங் முறையில் 'டோலி'' என்ற ஆட்டுக்குட்டியை ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் முதல்முதலாக உருவாக்கினார்கள். இதை அடுத்து குளோனிங் முறையில் கன்றுக்குட்டி, குரங்கு, குதிரை, பூனை, நாய் போன்றவை உருவாக்கப்பட்டன. குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்க பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளதால் 'கரு'நிலையுடன் மனித குளோனிங்' முறையை நிறுத்திக் கொண்டனர். இப்போது சீனாவும் குளோனிங் ஆராய்ச்சியில் தீவிரம் காட்டி வருகிறது. குளோனிங் முறையில் சீனாவின் ஹெனான் மாவட்ட வைத்தியர்கள் பன்றிக்குட்டி உருவாக்கியுள்ளனர். பெண் பன்றி ஒன்றின் காதுப் பகுதியில் இருந்து செல்களை எடுத்து இந்த குளோனிங் பன்றிக் குட்டியை உருவாக்கி இருக்கின்றார்கள்.

இதுபற்றி அந்த விஞ்ஞானிகள் கூறும் போது குளோனிங் மூலம் மூன்று பன்றிக்குட்டிகள் உருவாக்கப்பட்டன. கடந்த வாரமே இந்த மூன்று குட்டிகளும் பிறந்தன. ஆனால் அவற்றில் இரண்டு குட்டிகள் இறந்துவிட்டன. மீதி உள்ள குளோனிங் பன்றிக் குட்டி 1.3 கிலோ எடை உள்ளதாம்.





**பாக்தாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் எரிந்து கொண்டிருக்கும் வாகனத்தினருகில் நடந்து செல்லும் ஒருவர்.**

# நிரந்தர வீடுகளை அமைக்க செ.சங்கங்கள் காத்திருப்பு

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைக்க ஹொங்கொங் செஞ்சிலுவைச் சங்கமும், ஆஸ்திரிய செஞ்சிலுவைச் சங்கமும் திட்டங்களைச் சமர்ப்பித்து வீட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.**

நகர அபிவிருத்தி அதிகார சபை, நிரந்தர வீட்டுத் திட்டங்களுக்கான வரைபடங்களைத் தயாரித்து வழங்கிய பின்னரே நிரந்தர வீடு நிர்மாணிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி கிடைப்பது தாமதமாவதால் ஹொங்கொங் மற்றும் ஆஸ்திரிய நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கங்களால் நிரந்தர வீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க முடியாதிருப்பதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் டாக்டர் இ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார்.

ஆஸ்திரிய செஞ்சிலுவைச் சங்கம் குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் இரணைக்கேணி, புடவைக்கட்டு, கல்லாறவ பகுதிகளில் சுமார் 450 நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முன் வந்துள்ளது. இதற்கான முன்மொழிவுகள் தேவையான தரவுகளுடன் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஹொங்கொங் செஞ்சிலுவைச் சங்கம் ஈச்சிலம்பற்று மற்றும் மூதூர் பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தர வீடுகளைக் கட்டும் தமது முன் மொழிவுகளை தேவையான தரவுகளுடன் அரச அதிபரிடம் கையளித்துள்ளது.

ஆனால் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படவில்லை. இதன் காரணமாக இச் சர்வதேச தன்னார்வ அமைப்புக்களால் நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்த முடியாதிருப்பதாக டாக்டர்.இ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார். (25)

## விடத்தல் தீவுப் பகுதியில் குடிநீருக்கு தட்டுப்பாடு

மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு பகுதியில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்தக் கிராமத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களின் வாழ்விடங்களில் உள்ள கிணறுகள் உப்பு நீராக உள்ளதால் நல்ல தண்ணீருக்கு நீண்ட தூரங்கள் செல்ல வேண்டியுள்ளது. (24)

## மாந்தை மேற்கு பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தூட்டல்

(மல்லாவி)

மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேசங்களில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வும், ஒளிப்படக்காட்சியும் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

இந் நிகழ்வுகள் மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினரின் ஏற்பாட்டில் முல்லை மாவட்ட நிர்வாக சேவையின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன.

ஈச்சளவக்கை, பெரியமடு பகுதியில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வும் ஒளிப் படக்காட்சியும் கடந்த ஆறாம் திகதி இரவு 7.00 மணிக்கு ஈச்சளவக்கை முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

குளக்காடு கிராமத்தில் கடந்த ஏழாம் திகதி சமகால அரசியல் கருத்தூட்டல் நிகழ்வு நடைபெற்றது.(24)

## எழுச்சிப்பேரணியில் அனிசேர பச்சிலைப்பள்ளியில் கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை 9-30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் 01-09-2005 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறவுள்ள எழுச்சிப்பேரணி பற்றி ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் கிளி. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவாணன் கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் பசுபதிப்பிள்ளை, எழுச்சிப்பேரவை ஏற்பாட்டுக்குழு இணைப்பாளர் ஆகியோரிடம் கருத்துரைகளை வழங்கினர்.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவகர்கள் , பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்கள், பளை அஞ்சல் அலுவலக ஊழியர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (11)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையகம் திருகோணமலையில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் விரைவில் திருகோணமலையில் அமைக்கப்படவுள்ளது.

தமிழர்தாயகத்தின் தலைநகரம் திருகோணமலை என்பதால் அங்கு கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தை அமைப்பதே பொருத்தமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியன இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமைத்தன. பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் 22 பாராளுமன்ற ஆசனங்களை வென்றது கூட்டமைப்பு.

கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வந்த போதும் இதுவரை கட்சி ரீதியான கூட்டமைப்பு எதுவும் நிறுவப்படவில்லை. இதனை அடுத்து விரைவில் திருகோணமலையில் தலைமை அலுவலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தலைமை அலுவலகத்தில் கூட்டமைப்பினர், பாராளுமன்ற உறுப்பினர்கள் சுழற்சி முறையில் எப்போதும் இருந்து கொண்டே இருப்பர் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். பொது மக்களுடனான சந்திப்புக்களின் பொருட்டு இந்த ஏற்பாடு செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் இரு நூல்களின் வெளியீடு

(அலுவலகசெய்தியாளர்)




எழுத்தாளரும், வைத்திய அதிகாரியுமான முருகானந்தனின் துணைவியாரான திருமதி .சந்திர காந்தா எழுதிய "பெண் விடுதலையும் சமத்துவமும்'' என்ற நூல் அண்மையில் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் மணிமேகலைப் பிரசுர வெளியீடாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

புதிய நூற்றாண்டில் எழுத்துலகில் காலடி எடுத்துவைத்த இவர் பெண்ணிய எழுத்துக்கள் மூலம் குறுகிய காலத்தில் பலராலும், அறியப்பட்டவர் நம்பிக்கையூட்டும், பெண் படைப்பாளியாக இவரது பிரதான துறை பெண்ணியக் கட்டுரைகள் என்றாலும், கவிதை, சிறுகதை முதலான ஆக்க நூல்களையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் விடுதலையும், சமத்துவமும் என்ற இவரது நூலை எழுத்தாளர் ஞானம் ஞானசேகரம் வெளியிட்டு வைக்க, லயன்ஸ் கழகத்தின் சந்திரா கணபதிப்பிள்ளை முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

பெண் விடுதலையும், சமத்துவமும் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்ட அதே மேடையில் அதே நாளில் டாக்டர் க.முருகானந்தன் எழுதிய "நீ நடந்த பாதையிலே" என்ற கவிதைத் தொகுதியும் வெளியிடப்பட்டது. (சோ.கு)

## உடையார்கட்டு ம.வியில் திங்கள் பரிசளிப்பு விழா

மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா பாடசாலைமண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப.4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

## நலன் விரும்பியால் பாடசாலைக்கு உதவி

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் ராஜா தலைமையில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்துக்கான ஒன்று கூடல் நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்குஇடம்பெற்றது.

இவ்வொன்று கூடலில் பாடசாலை வளர்ச்சி விடயமாக கருத்துக்கள் பகிரப்பட்டன. இலண்டனில் இருந்து வந்த நலன் விரும்பியான தவசீலன் என்பவரால் குறிப்பிட்ட தொகைப் பணம் பாடசாலையின் வேலைத் திட்டத்திற்காக அன்பளிப்புச்செய்யப்பட்டது. (19)

### சிரமதானப்பணி

வட்டக்கச்சி மாயவனூர் பொதுமயான வீதி உலக உணவுத் திட்டத்தின் கீழ் வட்டக்கச்சி வாழ் மக்களால் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.(12)

## இணைப்பாளர்களுக்கான பயிற்சி நெறி

(திருமலை)

முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று நேற்று முன்தினம் திருகோணமலை வள்ளுவர் கோட்ட மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வ-கி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் போருட் சர்வ தேச தன்னார்வ தொண்டு அமைப்பின் அனுசரணையுடன் இப் பயிற்சி நெறியை நடத்துகின்றது. இப் பயிற்சிநெறிக்கு திருமலை மாவட்ட முன்பள்ளி நிதியா தலைமை நிகழ்வில் மாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளிப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயதம்மையா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திருமலை மாவட்டத் திட்டமிடல் அலுவலர் வே.கலைவர்ணன் ஆகியோரும் நிகழ்வில் பங்கு பற்றினர். இதன் இறுதி நாள் நிகழ்வு 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன் போது முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டு அதன் பெறு பேறுகளின் அடிப்படையில் சான்றிதழ்களை போரூட் நிறுவனம் வழங்க விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கென்று இவ்வாண்டு வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

இம் பெயற்பந்து வவுனியா மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்பட இருப்பதுடன் வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் ஏனைய தேவைகளுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (21)

## ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஆடிப் பூர பெருவிழா

(அலுவலகசெய்தியாளர்)

புதுக்குடியிருப்பு மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஆடிப்பூர பெருவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமையும், திங்கட்கிழமையும் வெகு சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாள் நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் செ.முகுந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேற்படி ஆடிப்பூர விழாவின் இறுதி நாள் நிகழ்வு திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் இரவு நடைபெற்ற மாலை நேர கலை நிகழ்வில் மேலும் புதுக்குடியிருப்பு பிரதேச பொறுப்பாளர் பிறையாளன், முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் எஸ்.எஸ் மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரவு நிகழ்வில் புதுக்குடியிருப்பில் பிரசித்தி பெற்ற ஆசிரியர்களின் பட்டிமன்றம், சிறார்களின் நடனம், நாடகம், வில்லுப்பாட்டு என்பனவும் நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு.08)

# தீவுப்பகுதிக்கு செல்வோர் மீது படையினர் கெடுபிடி நடவடிக்கை

(நயினாதீவு)

**நயினாதீவு மற்றும் நெடுந்தீவு பகுதிக்குச் செல்வோர் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.**

இப்பகுதிக்குச் செல்வோர் குறிகாட்டுவான் பகுதியில் நீண்ட நேரம் வெய்யிலில் காத்திருந்து இராணுவத்தினரின் பதிவு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் வயோதிபர்கள், பெண்கள் உட்பட பலரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் நயினாதீவு வணக்கஸ்தலம் மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்லும் யாழ்ப்பாண மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தோர் நெருக்கடி நிலைகளை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பகுதிக்குச் செல்லும் பயணிகளது அடையாள அட்டைகள் யாவும் பதிவுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதனால் அடையாள அட்டை இல்லாது செல்லும் பயணிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் நயினாதீவிலுள்ள நாகவிகாரைக்குச் செல்லும் பயணிகள் அங்கு வைத்துப் பதிவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். படையினரின் இந் நடவடிக்கைகள் குறித்துப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# மட்டுப்படுத்தப்பட்ட படகுச்சேவை; பயணிகளுக்கு போக்குவரவில் சிரமம்

(தீவகம்)

குறிகாட்டுவான் பகுதியில் இருந்து நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பகுதிகளுக்கான பயணிகள் படகுச்சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் ஏனைய பிரதேசங்களில் இருந்து இப்பகுதிக்குச் செல்லும் மக்களும் அங்கிருந்து பல்வேறு தேவைகளுக்காக ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும் மக்களும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நீண்டநேர இடைவெளியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் படகுச்சேவை இடம்பெறுவதுடன் பெருமளவான பயணிகளும் படகுகளில் ஏற்றிச்செல்லப்படுகின்றனர்.

நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு இப்பிரதேசத்திற்கு வரும் மக்கள் இந்த மட்டுப்படுத்தப்பட்ட படகுச் சேவையால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி படகுச்சேவையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வலி.சுதந்திரபுரம் கிராமத்தில் இடம்பெயர்ந்தோருக்கு காணிகள்

(வலி.மேற்கு)

வலி.மேற்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தரக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் துரித காணிச் செயலணி மேற்கொண்டிருப்பதாக அதன் ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

இப் பகுதி மக்களுக்கு அரச காணிகளில் இருந்து குடும்பம் ஒன்றுக்கு தலா ஒரு பரப்பு வீதம் என்ற வகையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இவ்வாறு 98 குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு பலாலி, மயிலிட்டி போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் வசித்து வரும் மக்களுக்கே இவ்வாறு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (37)

# இராணுவத்தினரும், பொலிசாரும் பருத்தித்துறையில் கூட்டு சோதனை

(பருத்தித்துறை)

வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் திடீர் கூட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை மெத்தாக்கடை சந்திப் பகுதியிலிருந்து 250 மீற்றர் தொலைவிலுள்ள பருத்தித்துறை டிப்போ பகுதி வரை நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொலிசாரும் திடீர் சோதனை ஒன்றை மேற்கொண்டனர்.

இக் கூட்டு சோதனை நடவடிக்கையின்போது வீதியால் பயணித்த உந்துருளிகள், கையேஸ் ரக ஊர்திகள் , தனியார் சிற்றூர்திகள், வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பயணிகள் ஊர்திகள் எனயாவும் மறிக்கப்பட்டுபயணிகளை கீழ் இறக்கி ஊர்திகள் கடுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் பயணிகளையும் சோதனையிட்டனர். இதனால் பருத்தித்துறை நகர்ப் பகுதியில் பதற்ற நிலமை உருவாகியது.

சோதனை நடவடிக்கை நேற்று முன்தினம் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை நீடித்திருந்தது.

இவ் நடவடிக்கையின்போது யாழ். பருத்தித்துறை வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளிகள், ஏனைய ஊர்திகள் யாவும் சோதனை மேற்கொள்ளப்பட்டதனால் மக்கள் பெரும் விசனமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் ஆயுத தாரிகளின் நடமாட்டம் அதிகரிப்பதாக தமக்குக்கிடைத் தகவலையடுத்து தாம் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொலீசார் தெரிவித்தனர். (கா)

**நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு**

# களவு, கலாச்சார சீரழிவைத் தடுக்க விசேட செயலணிக் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் களவு மற்றும் கலாச்சாரச் சீரழிவுகளைத் தடுக்க யாழ்.பிரதேச அரசியல் துறையின் ஏற்பாட்டில் விசேட செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட செயலணியானது பக்தர்கள் என்ற போர்வையில் வரும் திருடர்கள் மற்றும் கலாச்சாரச் சீரழிவில் ஈடுபடுபவர்கள் பெண்களிடம் சேட்டையில் ஈடுபடுவார்கள் மற்றும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் விசமிகளை சம்வப இடங்களில் இருந்து கைது செய்யும் நடவடிருக்கையில் ஈடுபடும். அத்துடன் பொதுமக்களுக்கு இடையூறாக செயற்படுவோரையும் இவ்விசேட செயலணிக்குழு கண்காணிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (28)

# வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் கலாசாரப் பெருவிழா நிகழ்வு

(வலி-மேற்கு)

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை நடாத்தும் கலைஇலக்கியப் பெருவிழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது வலி.மேற்குப் பிரதேச செயலரும், கலாச்சாரப்பேரவைத் தலைவருமாகிய சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் சங்கானை கலாசார மண்டபதிறந்த வெளிஅரங்கில் இவ்விழா ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்வு அமரர் கலாபூஷணம் அ.முருகவேள் அரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபரும்-உலகவங்கி வீடமைப்புத்திட்ட மாகாணத்திட்டமிடல் பணிப்பாளருமான செ.பத்மநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ரி.சிவலிங்கராசா வழங்கவுள்ளார். இக்கலை இலக்கியப் பெருவிழாவின் முதலாம்நாள் சிறப்புநிகழ்வாக பாரம்பரிய கலை நிகழ்வுகளான பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடிநடனம் போன்றவற்றுடன் கூடிய பண்பாட்டுப் பேரணி ஒன்று சங்கானை மனோன்மணி அம்மன் ஆலயத்திலிருந்து விழா மண்டபம் வரை இடம்பெறவிருக்கின்றது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை முன்னாள் வலி. மேற்குப் பிரதேச செயலர் அமரர் கா.சந்திரராசா அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை,பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபரும் கலந்துகொள்வர்.

இதில் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். வலி.மேற்குப் பிரதேச கலைஞர்களை அரச அதிபர் கே.கணேஷ் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். இசை,நடன,நாடக மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (37)

# "போயிட்டி" கிராமத்தில் மிதிவெடிகள் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாதகல் தெற்கு கிராம அலுவர் பிரிவிலுள்ள போயிட்டி என்ற கிராமத்தில் இராணுவத்தால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"ஹலோரஸ்ட்"என்ற வெளிநாட்டு நிறுவனத்தினாலேயே இந்த மிதிவெடிஅகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்து மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப்பகுதியில் மிதிவெடி அபாயமுள்ளது என்று வலி.தென்மேற்குப் பிரதேசசெயலருக்கு இப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதேச செயலர் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்தே இம் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (37)

# யாழ்–மன்னார் ஏ–32 வீதியில் ஒன்பது பாலங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும், மன்னாருக்கும் இடையிலான ஏ-32 நாவக்குழி-கேரதீவு வீதியை இணைக்கும் ஒன்பது பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளன. ஐக்கிய இராச்சியத்தின் 230 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வடக்கு கிழக்கு பாலங்கள் புனரமைப்புத் திட்டம் இந்த புனரமைப்புகளை மேற்கொள்ளவுள்ளது. குறிப்பிட்ட வீதியில் ஏழு பாலங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதியிலும் இரண்டு பாலங்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதியிலும் அமைந்துள்ளன.

அரிப்பு மற்றும் அருவி ஆறு ஆகிய பாலங்கள் அரசாங்க கட்டுப்பாட்டிலும் பள்ளமடு, இலுப்பக்கடவை, பறயனாறு ஆகிய இடங்களில் தலா இரண்டு பாலங்களும், சித்தி ஆறுபகுதியில் ஒரு பாலமுமாக ஏழு பாலங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் இடையிலான கேரதீவு வீதி கடந்த 30 வருடகாலமாக புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

# வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் திருட்டு

(வலி.மேற்கு)

தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பெறுமதி வாய்ந்த பொருட்கள் பலவும் இச சம்பவத்தின் போது திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

ஆலய பின்பக்கச் சுவரை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த திருடர்கள் பிரதம செயலக அறையை உடைத்து- அங்கிருந்ததிறப்புக் கோர்வையை எடுத்து ஆலயத்தின் கற்பக்கிரக அறைவரை புகுந்து பொருட்களைத் திருடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டுச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிசாரிடம் முறைபாட்டினை ஆலய பரிபாலன சபையினர் செய்திருக்கின்றனர். (37)

# தீவுப்பகுதி பேருந்து சேவையை அதிகரிக்கும் படி கோரிக்கை

(தீவகம்)

தீவகப் பகுதிக்கான பேருந்து சேவைகள் போதுமானதாக இல்லையென அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளும், தனியார் சிற்றூர்திகளும் தமது சேவைகளை தீவகப் பகுதிக்கு குறைந்த அளவிலேயே மேற்கொண்டு வருகின்றன.

இதனால் பொதுமக்கள் போக்குவரவின் போது நீண்டநேரம் பேருந்துக்காக காத்து நிற்க வேண்டியநிலை காணப்படுகின்றது. அத்துடன் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் மக்கள் நெருக்கமான நிலையில் பயணம் செய்வதைக்காண முடிகின்றது.

தீவகப் பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக யாழ் நகரப் பகுதிக்கு வரவேண்டிய கட்டாய தேவை உள்ளது.

பேருந்து சேவைகள் போதுமானதாக இல்லாததால் விரைவாக தமது பணிகளை மேற்கொள்ள முடியாது பொதுமக்கள் அல்லலுறுகின்றனர்.


சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி போக்குவரத்தினை சீர்செய்ய வேண்டுமெனப்பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புலிகளின் சமாதான நடவடிக்கைகளை தெற்கு அரசியல் வாதிகள் சரியாகப்பயன்படுத்தவில்லை

கடந்த யூலைமாதம் 7 ஆம் திகதி நான்கு தற்கொலைக்குண்டு தாரிகள் லண்டனில் குண்டு களை வெடிக்க வைத்ததில் பலர் உயிரி ழந்தனர். லண்டன் குண்டு வெடிப்பு நடந்து இரண்டு வாரத்தின் பின் இங்கிலாந்தின் விடு தலை இயக்கமான ஐ.ஆர் ஏ. அமைப்பு தனது போராட்டத்தை கைவிடுவதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. வடஅயர்லாந்தில் பிரிட்டனின் ஆட்சியைக் கைவிடுமாறும் அங்குள்ள படைகளை அகற்றுமாறும் கோரியே இவர்கள் இப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இப்போராட்டத்தை சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கு எடுத்த முயற்சிகள் எல்லாம் படுதோல்வி கண்டன.

1997 ஆம் ஆண்டுரொனிபிளேயர் ஆட்சியை பொறுப்பேற்ற பிறகு அதற்கு முன்னர் பிரதமர்



நன்றி லங்கா தீப

ஜோன் மேயர் ஆரம்பித்த அதேகொள்கையை இவர் கடைப்பிடித்தார். எதிர்க்கட்சி- ஆளும் கட்சிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஜோன் மேயரும், ரொனி பிளேயரும் ஒன்றிணைந்து சமாதானத்தை முன்னெடுத்துச் சென்றனர் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமை தினத்தில் வட அயர்லாந்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கி, சமாதானத்தை ஏற்படுத்துவதே ரொனி பிளேயரின் குறிக்கோளாக இருந்தது. ஆனால் ரொனி பிளேயர் எதிர்பார்த்தது போல் சமாதானம் இலகுவாக அமையவில்லை. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டு பல வாரங்களின் பின் ஐ ஆர்.ஏ.அமைப்பு இரண்டாகப் பிளவுபட்டு ரியல் ஐ.ஆர். ஏ. அமைப்பை ஏற்படுத்தி மீண்டும் ஒருபோராட்டத்தை ஆரம்பித்தது.

ஆனால் ஐ.ஆர்.ஏயின் அரசியல் அமைப் பான "சின்பென்" தலைமைப் பீடத்துடன் பல நாட்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

பயங்கரவாதிகளை செல்லப்பிள்ளைகளாக ரொனி பிளேயர் வளர்க்கின்றார் எனவும் அளவுக்கு அதிகமாக அவர்களின் நலன்களை அக்கறையுடன் கவனித்து வருகின்றார் என்றும் பிரதமர் ரொனிபிளேயரைப் பற்றி லண்டன் ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் விமர்சனம் செய் திருந்தார். ஆனால் இது சமாதானப் பேச்சுவார்த் தைகளைப் பாதிக்கவில்லை.

இதன் பிரதிபலனாக கடந்த யூலை 28 ஆம் திகதி ஐ.ஆர். ஏ.அமைப்பு தமது விடு தலைப்போராட்டத்தை முற்றாக நிறுத்துவதென பிரிட்டனுக்கு அறிவித்துள்ளது. எனவே, மேலும் பிரித்தானிய படைகளை வட அயர்லாந்தில் நிறுத்திவைக்க முடியாது. இந்நிலையில் பிரித்தானிய அரசு படிப்படியாக தமது படை களை வாபஸ் பெற்றவண்ணமுள்ளது.

இதிலிருந்து நாங்கள் சில பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். இன்று நாட்டில் சனா திபதித் தேர்தல் சம்பந்தமாக சகலரும் பேசிக் கொள்கின்றார்கள். இன்று நாட்டில் எப்பொழுது, எந்தத் திகதியில் சனாதிபதித் தேர்தல் நடை பெறும், இதில் வெற்றி பெறுவது ரணில் விக்கிரமசிங்கவா அல்லது. மகிந்த ராஜபக்ஷவா என்று பொதுமக்களும், அரசியல் அவதானி களும் பேசிக் கொள்கிறார்கள். தேர்தல் ஒரு நாட்டில் நடந்தால் அது சம்பந்தமாக தேர்தல் சூடு ஒன்று நாட்டில் ஏற்படும். இது வழமையாக நடக்கும் சம்பவங்களில் ஒன்றாகும். இது உலக நாடுகளுக்கும் பொதுவானதாகும். இலங்கைக்கு மட்டும் அல்ல பிரித்தானியாவில் அண்மையில் நடந்த தேர்தல் மூலம் நாம் கண்டறிந்த விடய மாகும். ஆனால், தேர்தலுக்கு பின் இலங் கையின் நிலைப்பாடு முற்றாக வேறுபட்ட தொன்றாகவே இருக்கும். 1997 ஆம் ஆண்டு பிரித்தானியப் பொதுதேர்தலின் பிறகு ரொனி பிளேயரும் ஜோன்மேயரும் கைகோர்த்துக் கொண்டு சமாதான செயற்பாடுகள் சம்பந்தமாக ஒன்றாகச் செயற்பட்டனர். இவர்கள் இருவரும் தத்தமது சொந்த நலன்களுக்காக பாடுபட வில்லை.

விடுதலைப்புலிகள் மூன்று வருடங் களுக்கு முன்னதாகவே சமாதான நடவடிக் கைகளில் ஈடுபடத்தொடங்கினார்கள். ஆனால் தெற்கு அரசியல் கட்சிகளும் அதன் தலைமைப் பீடங்களும் இதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இக் குற்றத்தை விடுதலைப் புலிகள்மேல் சுமத்த முடியாது. இதன் முழுப் பொறுப்புக்களையும் தென்னிலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் வழமைபோல் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும், விமர்சனம் செய்வதும் மற்றவருக்கு தெரியாமல் அவரின் காலைவாரிக் கீழே வீழ்த்துவதிலும் காலத்தை கடத்தி அரசாங்கத்தை வீழ்த்தினார்கள். ஆனால் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க இவர்களால் இயலாமல் போயிற்று ஏனென்றால் அவர்களிடத்தில் திடமான கொள்கைகள் இருந்தன.

பயங்கரவாத இயக்கங்களுக்கு அதிக சலுகைகளை பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர் வழங்கிவருவதாக பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பிளேயரின் அரசுக்கு எதிராக சுமத்தினாலும் அவரின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சி முயற்சிக்கவில்லை. அவர்களின் ஆதரவு சமாதானத்தை முன்னெடுத்து செல்வதில் மிக உறுதியாக இருந்தது. ஆனால் எமது நாட்டில் அப்படிப் பட்ட சம்பவத்தை காண்பது மிக அரிது. சமா தான முயற்சிகளை அரசு முன்னெடுக்கும் பொழுது, அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர் க்கட்சி முயற்சிகளை எடுத்தது. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரையில் நாட்டின் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு சட்டபூர்வ ஆட்சி செய்து சமாதானத்தை முன் னெடுத்துச் சென்றபொழுது, இதை இந்த நாடு பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது. சந்திரிகா ஆரம்பித்த சமாத்ர்னத்திட்டத்தை ரணில் அமுல்படுத்தினார், அதை செயலிலும் காட்டினார். புலிகளின் துப்பாக்கி வேட்டுக் களுக்கு ஓய்வு கொடுத்தார். ஆனால் இதை சந்திரிகாவினால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. அவரின் மனதில் பொறாமை கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. இந்த நாட்டின் சமாதானத்தின் கதாநாயகனாக ரணில் வரப்போகிறார். தனது தலையீடு எதுவும் இல்லாமல் இந்த சமாதானம் வெற்றிபெறப் போகின்றது என நினைத்து சந்திரிகாவும், அவரின் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களும் நாடு எக்கேடுகெட்டாலும் பரவாயில்லை, மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென நினைத்து நிறைவேற்று அதிகாரத்தை பாவித்து அன்றைய பாராளுமன்றத்தை கலைத்து மீண்டும் ஆட்சியை பறித்துக் கொண்டனர். இதனால் நாட்டின் சமாதானம் பின்தள்ளப்பட்டு தற்பொழுது அது கேள்விக்குறியாகவுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினால் சமாதானத்தின் கால்பகுதியைக் கூட நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நிலையில் இன்று திண்டாடிக் கொண்டிருக்கின் றோம். நாம் சரித்திரத்தை புதிதாக எழுத முடியாது. ஏனெனில் இன்று சிறிலங்கா அரசு

தேர்தலில் தனது முழுக்கவனத்தையும் செலுத்திய வண்ணமுள்ளது. இன்று அரசாங்கமும், எதிர்க்கட்சியும் நாட்டின் பிரச் சினையைத் தீர்க்க முன் வரமாட்டார்கள். அவர்களின் சொந்தக் குரோத மனப்பான்மையே இதற்கு முதல் காரணமாக அமைந் துள்ளது.விசேடமாக பண்டாரநாயக்க குடும்பம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வராது.விஜயகுமாரதுங்கவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் பொழுது செய்த துரோகத்தனத்திற்கான அரசியல் பழி வாங்கல் ஒருகாரணமாக அமைந்துள்ளது. சந்திரிகாவின் மனதை இச் சம்பவம் அடிக்கடி உறுத்திய வண்ணமுள்ளது. இவையாவும் கடந்த கால சம்பவங்கள். ஆனால் சந்திரிகா வுக்குப்பிறகு கட்சியின் தலைமைப்பீடம் மகிந்த ராஜபக்ஷ கைக்கு மாறியுள்ளது. எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரம சிங்க வுக்கும் தற்போதைய பிரதமரும் சனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷவுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. இருவர் இடத் திலும் பகைமை கிடையாது.

சமீபகாலம் வரை மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் மிக அன்னி யோன்னியமாக பழகிவந்தார்கள். சுதந்திரக்கட்சியில் மகிந்த ராஜபக்ஷவை புறந்தள்ளுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளின்பொழுது மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சிதலைவரும் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களும் மறைமுகமான ஆதரவை அவருக்கு வழங்கியபடியால் சுதந்திரக்கட்சியால் அவரை ஓரம் கட்டமுடியாமல் போயிற்று. ஆனபடியால் தென்பகுதியின் தற்போதைய அரசியல் நிலவரங்களின்படி மோதல்சம்ப வங்கள் ஏற்படாது.ஏற்படவும் கூடாது.

ஆனால் தேசிய பிரச்சினை சம்பந்தமாக மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் காய் நகர்த்தல் தெளிவானதல்ல. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தமது கட்சி முழு ஆதரவைவழங்கப் போவதாக சமீபத்தில் வாசு தேவநாணயக்கார கூறியிருந்தார். சமா தானத்தை முன்னெடுத்து செல்வதுடன் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்பது வாசுதேவநாணயக்காரவின் நிபந் தனையாகும். இதற்கு இதுவரை மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து தெளிவான பதில் வரவில்லை.

கடந்ததேர்தல் காலங்களில்தேசிய பிரச்சினை சம்பந்தமாக இரு கட்சிகளும் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்தன. அதில் மாற்றங்கள் இல்லை. ஆனால்அதைக் கையாளும் மனிதர்களில் மாற்றம் உண்டு. ரணில் அல்லது மகிந்தராஜபக்ஷ இல்லா விடில் மற்றொருவர் சனாதிபதியானாலும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சியும், ஆளும்கட்சியும் ஒன்றிணைய வேண்டும். கால்களை வாரிக்கீழே தள்ளும் நடவடிக் கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். அரசியல் பழிவாங்கலை நிறுத்திக்கொள்ள வேண்டும்ரொனிபிளேயரும் ஜோன் மேயரும் தேசிய பிரச்சினைகளின் பொழுது கைகோர்த் துக் கொண்டு எப்படிச்செயற் பட்டார்களோ, அதேபோல் எமது நாட்டில் கொழுந்து விட் டெரியும் இனப்பிரச்சினையில் எதிர்க்கட்சியும் அரசும் ஒன்றிணைந்து குரோத ங்களை மறந்துசெயற்படுவார்களானால் இனப்பிரச்சினை யில் நல்லதொரு முடிவைக் காணமுடியும்

**லங்காதீப சிங்களநாளிதழ்**
**ரங்க கலன் சூரிய**
**மொழியாக்கம்**
**அ.சக்திவேல்**

# பள்ளிசெல்லும் 110 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபி விருததி புனர்வாழ்வு நிறுவனத்தினரின் ஒழுங்கு படுத்தலில் முள்ளியவளை கிழக்குகிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பள்ளி செல்லும் 110 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங் கும் நிகழ்வு கடந்த ஆறாம்திகதி பி.ப. 3.00 மணிக்கு முள்ளியவளை கிழக்கு கிராம அபி விருத்திச் சங்க மண்டபத்தில் முள்ளியவளை பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்டஇணைப்பாளர் செல்வி.சோ. கலா மலர் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கற்றலின் முக்கியத்துவம், எதிர்காலசந்ததி எவ்வாறான கல்வி அறிவுடன் வளர்க்கப்படவேண்டும் இவ்வாறான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதன் நோக்கம், சமகால அரசியல் நிலை என்பவற்றை உள்ள டக்கி சிறப்பு கருத்துரையினை முள்ளியவளைப் பிரதேசஅரசியல்துறைப்பொறுப்பாளர் இ.சர வணன் நிகழ்த்தினார்.

முள்ளியவளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், முள்ளியவளைப் பிரதேச அன் னையர் முன்னணிபொருளாளர் சி.கமலநாயகி, முள்ளியவளை கிழக்கு கிராமஅலுவலர் கு. தெய்வேந்திரம், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன முல்லைமாவட்ட இணைப் பாளர் நிறஞ்சனா ஆகியோர் 110 மாணவர் களுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்கி கௌரவித்தனர். (ஆ)

# மாணிக்கபுரம் மஞ்சள் பாலம் பகுதியில் மண் ஏற்றுவதற்கு முற்றாகத் தடை

(உடையார்கட்டு)

விசுவமடு மாணிக்கபுரம் பிள்ளையார் கோவில் மஞ்சள் பாலப் பகுதியில் மண் ஏற்றுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விசுவமடுப் பிரதேச இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.இதனை கருத்திற் கொண்டு மண் ஏற்றுவோர் செயற்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மஞ்சள் பாலம் இடிந்து விழும் நிலை தோன்றுவதையும், ஆற்றுப் பகுதி வாய்க்கால் அகலமாவதையும் தடுப்பதற்காகவே இந்தப் பகுதியில் மண் ஏற்றுதல்தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (19)

# உடையார்கட்டு க.ந.சே. நிலையத்தில் பொருண்மிய நிறுவன பிரதேச செயலகம்

விசுவமடு பிரதேசப் பொருண்மிய மேம் பாட்டு நிறுவன செயலகம் உடையார்கட்டு கம நல சேவை நிலையத்தில் செயற்பட்டு வரு வதாக பிரதேச இணைப்பாளர் தெரிவித்துள் ளார். எனவே இப்பிரதேச விவசாயிகள், கமக்கார அமைப்பினர் தொடர்புகளை உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் செயற்படும் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய லகத்துடன் தொடர்பைஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (19)

# பொன்விழாக் காணும் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி
## வளப்பற்றாக்குறை இருந்தும்
## கல்வியிலும், விளையாட்டிலும் பின் நிற்கவில்லை

வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அழகு பூத்த புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1955ஆம் ஆண்டு வித்து ஒன்று புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் இடப்பட்டது. அந்த வித்து முளைத்து படிப்படியாக வளர்ந்து இன்று புதிய நுாற்றாண்டில் பெருவிருட்சமாக



அதிபர்
பெ.க.சிவலிங்கம்

வளர்ச்சியடைந்து வன்னிப்பெருநிலப்பரப்பிற்கும் எமது தாயகப்பகுதிக்கும் பெருமையைத் தேடிக்கொடுத்து வருகின்றது.

அன்று பெரியோர்கள் தமது பிரதேசத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இக்கல்லூரியினை ஆரம்பித்து வைக்க, அது மக்களின் எதிர்பார்ப்பை வருடாவருடம் நிறைவேற்றி வருகின்றது.

ஆரம்பப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை மகாவித்தியாலயமாக மாறி இன்று மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து செயற்பாடுகளிலும் முன்மாதிரியான கல்லூரியாகத் திகழ்கின்றது. இந்தக் கல்லூரியில் கல்விகற்று வருடாவருடம் பல்கலைக்கழகம் செல்வோர் பலர், ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் இன்னும் பல அதிகாரிகளாகவும் உள்ளனர். தொடர்ந்தும் இவ்வாறு உற்பத்தியாகிக்கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு பெரிய ஆசான்களை உருவாவாக்கிவரும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இன்று பொன்விழாக் காண்கிறது. அந்த விருட்சம் வேறு எதுவும் இல்லை. புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியே அது வாகும்.

இவ்வாறு பொன்விழாக் காணும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் தோற்றம்




வளர்ச்சிபற்றியும் தற்போதைய புதிய பரிணாம வளர்ச்சியையும் அதற்குத்தூண்டுகோலாக அமைந்த காரணிகள் பற்றியும் மற்றும் மத்தியகல்லூரி இன்று பொன்விழாவை பூர்த்தி செய்துகொள்ளும் வேளை பாடசாலை ரீதியாக கல்வி, பாடவிதான செயற்பாடுகள் ஏனைய துறைகளில் எவ்வாறான மாற்றங்களைக் கண்டுள்ளது. எவ்வாறு முன்னேற்றம் அடைந்து செல்கின்றது போன்ற விடயங்களையும் மத்திய கல்லூரியின் முதல்வர் பெ.க.சிவலிங்கம் அவர்கள் இவ்வாறு எடுத்தியம்புகின்றார்.

“இந்த மத்திய கல்லூரியானது 1955ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி புதுக்குடியிருப்பில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் ஆரம்பப் பாடசாலையாகத் தோற்றம் பெற்றது. அந்த நேரம் ஊரில் உள்ள பொதுமக்களாலும், அமரர் நேசரத்தினம் அவர்களாலும் சைவவித்தியாபிவிருத்திச்சங்கத்தை இணைத்து ஆரம்பப் பாடசாலையாக கந்தசுவாமி கோவில் காணியில் ஆரம்பிக்கப்பட்டது.

அந்தக்காலத்தில் ஆரம்பப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் படிப்படியாக வளர்ச்சி கண்டு மேல் வகுப்புக்களையும் கொண்டு இயங்கும் பாடசாலையாக வளர்ச்சி கண்டு 1965 ஆம் ஆண்டு மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

இவ்வாறு மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட ஆண்டிலிருந்து உயர்தரவகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் பல்லைக்கழகங்களுக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலிருந்து செல்லத் தொடங்கினர்.

அதைத் தொடர்ந்து 1978ஆம் ஆண்டு உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1980 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு ஒரு கல்லூரியின் தரத்தைப் பெற்று இயங்கிவந்த புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் இவ்வருட ஆரம்பத்தில் மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் சனவரி மாதம் முதலாம் திகதி மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து கல்வி மற்றும் அதனுடன் சேர்ந்த அனைத்து துறைகளிலும் முன்னேற்றமாகச் செயற்பட்டுக்கொண்டு வருகின்றது.

இதைவிட ஆண்டுதோறும் எமதுகல்லூரியில் இருந்து பல்கலைக்கழகங்களிற்குச் செல்கின்ற மாணவர்களின்தொகை அனைத்துப் பிரிவுகளிலும் அதிகரித்துக்கொண்டு தான்செல்கின்றது.

அதேவேளை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தமிழ், ஆங்கிலம், விளையாட்டு மற்றும் அனைத்துப் போட்டிப்பரீட்சைகள் என்பவற்றிலும் மாணவர்கள் முன்னுதாரணமாக செயற்பட்டு வருகின்றார்கள். அதன்விளைவாக தேசிய மட்டத்தில் எமது கல்லூரியின் தரம் பற்றிப் பேசப்படுகின்றது.

கல்வியின் வளர்ச்சி வேகம் போலத்தான் விளையாட்டுத்துறையிலும் எமது கல்லூரி முதல்நிலை வகிக்கின்றது. அண்மையில் எமது கல்லூரி மாணவன் சர்வதேச ரீதியில் போட்டியிட்டு தங்கப்பதக்கம் பெற்று வந்துள்ளார். இது எமது கல்லூரிக்கும், எமது பிரதேசத்திற்கும், மாவட்டத் திற்கும், தமிழீழத்திற்குமே பெருமை சேர்த்துத் தந்துள்ளது.

நிறஞ்சன் என்ற மாணவன் முதலில் பாடசாலை ரீதியாகவும் பின்னர் தேசிய ரீதியான போட்டிகளில் பங்குகொண்டு சர்வதேச மட்டத்தில் கொரியா நாட்டில் இவ்வருடம் நடைபெற்ற இளைஞருக்கான மெய்வல்லுனர் போட்டியில் பங்குகொண்டு இரண்டு தங்கப்பதக்கத்தையும், அஞ்சல் ஓட்டப்போட்டியில் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். இந்த செயற்பாடு எமது கல்லூரி பொன்விழாக்காணும் இந்த சந்தர்ப்பத்தில் மேலும் கல்லூரியின் பரிணாம வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

இக் கல்லூரி ஆரம்பகாலங்களில் பெரிய கட்டடங்களையோ அல்லது இலங்கையில் வசதிபடைத்த இடங்களில் உள்ள பாடசாலைகள் போல அனைத்து வசதிகளையுமோ கொண்டிருக்கவில்லை.

இதற்குக்காரணம் எமது பகுதிகளில் நடைபெற்ற போராட்டம், இதனால் ஆரம்பத்திலிருந்து சிறிய தற்காலிகக் கொட்டகைகளிலேயே இயங்கி வந்தது. இதிலும் 1988ஆம்ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையினரின் கெடுபிடிகளால் பாடசாலை ஆக்கிரமிக்கப்பட்டதன் காரணமாகவும் பாடசாலையின் விஸ்தீரணம் மாணவர்களுடைய தொகைக்கு ஏற்ப காணப்படாததாலும் பாடசாலை இப்பொழுது இருக்கின்ற காணிக்கு மாற்றப்பட்டது.




இந்தக்காணியினை புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் பாடசாலைக்காக அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றார்கள். ஏறத்தாள 33 ஏக்கர் நிலத்தை பாடசாலைக்காகத் தந்துள்ளனர். அவ்வாறு பாடசாலைக்கென்று காணி நிரந்தரமாகக் கிடைக்கப் பெற்றதிலிருந்து கட்டடங்கள் அமைக்கப்பட்டுவரும் காலங்களில் நாட்டினுடைய சூழ்நிலையினால் எந்தவிதமான நிரந்தரக்கட்டங்களும் அமைக்கமுடியவில்லை.

அதற்குப்பின்னர் 2002 ஆம்ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ததன் பின்னர் தான் கல்லூரியில் நிரந்தரக்கட்டடம் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்று வரை நிரந்தரக்கட்டடங்கள் ஒவ்வொரு முக்கியமான தேவையையும் கருத்திற்கொண்டு நிறுவப்பட்டு வருகின்றன.

இருந்தும் மூன்றில் இரண்டு பங்கு வகுப்பறைகள் தற்காலிகக் கொட்டகைகளில் தான் இயங்கிவருகின்றன. இருந்தாலும் முன்னைய காலத்தைவிட வளர்ச்சிதான்.

முக்கியமாக கல்லூரி வளாகம் முன்னர் முட்கம்பிகளினால் அடைக்கப்பட்டிருந்தது. இப்போது மதில் கட்டப்பட்டு இருக்கின்றது. இதுஎமது ஐக்கியராச்சிய பழையமாணவர் சங்கத்தினரால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் அவர்களுடைய நிதியுதவியுடன் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி மலசல கூட வசதிகளை அவர்களே அமைத்துத் தந்திருக்கிறார்கள். இதற்கு மேலாக இந்தப் பொன்விழா ஆண்டை முன்னிட்டு ஐக்கியராச்சிய பழையமாணவர் சங்கத்தினரால் ஒரு கோடியே அறுபது இலட்சம்ரூபாய் பெறுமதியான பாரிய மண்டபம் ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர். இது எமது கல்லூரியில் கல்விகற்ற மாணவர்களின் பெரும்தன்மையையும், பொதுமக்களுடைய ஒத்துழைப்பையும் எடுத்துக்காட்டுகின்றது.

இதற்காக எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கின்றார்கள். அதற்காக நாங்கள் கல்லூரி சார்பாக பழையமாணவர்களுக்கும், மக்களுக்கும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

இதைவிட பிரான்சில் இருக்கின்ற பழைய மாணவர் சங்கத்தினர் நிறைய உதவிகளைப் புரிந்துள்ளனர். அவர்கள் தான் இந்தக்கல்லூரியில் முதன்முதலில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர். அதுதான் எமக்கு ஒரு நிரந்தரக் கட்டடமாக இருந்து பின்னர் ஏனைய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அதைத்தொடர்ந்து எமக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்கள் நாற்பத்தைந்துக்கு மேற்பட்டவையாக இருந்தாலும் தற்போது 22 வகுப்பறைகள் தான் நிரந்தரக்கட்டடமாக உள்ளன. மற்றும் உயர்தர வகுப்புக்குரிய ஆய்வுகூடம் ஒன்றும் 60 அடி நீளமும், 20 அடி அகலமுடைய நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட பாராளுமன்ற உறுப்பினர் விநோனோகராதலிங்கம் அவர்களுடைய உதவியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் ரூபா செலவில் ஒரு கணினி நிலையம் ஒன்றினையும் அமைத்திருக்கின்றோம். அத்துடன் இந்த மண்டபம் ஆகிய வைதான் எமக்கு நிரந்தரமாக அமைக்கப்பட்ட கட்டடங்களாக உள்ளன.

மேலும் இவ்வளவு வசதிகளையும் கொண்டிருந்தாலும் ஏனைய நகர்ப்புற பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது இன்னும் நிறையத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் தான் உள்ளது. ஆசிரியர் வளத்தைப்பொறுத்த வரை துறை ரீதியாகத்தான் பற்றாக்குறையுள்ளது. அதிலும் விஞ்ஞானபாடம் மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கு ஒட்டுமொத்தமாகப் பற்றாக்குறையாகத்தான் இருக்கின்றது.

எவ்வளவு வசதிகள் வாய்ப்புக்கள் குறைவாக இருந்தாலும் கல்வி ரீதியாகவும் ஏனைய விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் என்பவற்றில் மாணவர்களின் வளர்ச்சி சிறிதளவேனும் பாதிப்படையவில்லை மேலும் வளர்ச்சியை நோக்கித்தான் செல்கின்றார்கள். எமது கல்லூரியின் ஆசிரியர்களுடைய அயராத முயற்சியின் விளைவாகத்தான் இந்த வளர்ச்சிப்போக்கை காணமுடிகின்றது. ஆகவே ஆரம்பப்பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இன்று பரிணாமவளர்ச்சியைக் கண்டு பொன்விழாவை இந்தக்கல்லூரி கொண்டாடும் ஆண்டில் மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டிருப்பது ஊர்மக்களுக்கும், பாடசாலைச்சமூகத்திற்கும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனை அடித்தளமாகக்கொண்டு இனிவரும் காலங்களில் இக் கல்லூரியின் செயற்பாடுகள் மிகமிக உச்சக்கட்டத்தை அடைந்து பிரதேசத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துத் தரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

**தூ.குகன்**
**பழைய மாணவன்**

எனவே இந்தப்பொன் விழாவைக் கொண்டாடும் இந்தக்கல்லூரி மேலும் வளர்ச்சியடைய வேண்டும். எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று புதுப்பொலிவுடன் என்றென்றும் அழியாச்செல்வம் கல்வியை வழங்கி நல்ல பெரிய மனிதர்களை, அறிவாளிகளை உருவாக்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன் என மத்தியகல்லூரி முதல்வர் தெரிவித்தார்.

# கொழும்பு சென்ற தொடரூந்தில் பொலிசாரால் தமிழ்ப் பெண் கைது

கடந்த திங்கட்கிழமை காலை மாகோவிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்த தொடரூந்து பொல்காவலை நிலையத்தில் நிறுத்தப்பட்டபோது அதில் பயணம் செய்த தமிழ்ப் பெண் ஒருவர் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தொடரூந்து பொல்காவலை நிலையத்துக்கு வந்திருந்தபோது தொடரூந்திற்குள் ஏறிய பொலிசார் இப்பெண்ணைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்த 30 அகவை மதிக்கத்தக்க பெண் ஒருவரே இவ்வாறு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ்நிலையம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அவசர சேவை பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்தே பொல்காவலை பொலிசார் இப்பெண்ணைக் கைது செய்துள்ளதாகவும் இப்பெண்ணிடம் பயணப்பை தவிர வேறெதுவும் இருக்கவில்லையென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

பொலிஸ் காவலில் இருக்கும் இப்பெண் இதுவரை தான் யார், எங்கிருந்து எங்கே எதற்காக செல்கின்றார் என்ற தகவல் எதையும் தெரிவிக்கவில்லையென்றும் உணவு உண்ணவோ,நீர் அருந்தவோ, சோதனை செய்ய அனுமதிக்கவோ மறுத்து வருவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# சுனாமி பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக

# பாராளுமன்றில் இன்றும், நாளையும் விவாதம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிறிலங்கா பாராளுமன்றத்தில் இன்றும், நாளையும் விவாதம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை கூடிய போது சபை முதல்வராக நிமால் சிறிபால டி சில் வாவை சபாநாயகர் லொக்குபண்டார அறிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மூத்த அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கடந்தவாரம் சபை முதல்வர் பதவியிலிருந்து விலகிய நிலையில் அந்த இடத்துக்கு நிமால்சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாண சிறிலங்கா பொலிஸ் உயர் அதிகாரி சார்ள்ஸ் விஜேவர்த்தனவின்மரணம் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, இந்த மரணத்துக்குக் காரணமானவர்களை நீதிமன்றின் முன்பாக அரசு கண்டிப்பாக நிறுத்தும் என்றார். இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உரிய விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# யாழ்ப்பாண மாநகரசபை

## நல்லூர் உற்சவம் 2005 வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் விதிகள் 10.08.2005 ஆம் திகதி தொடக்கம் 04.09.2005 ஆம்திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

01.மூடப்பட்டிருக்கும் வீதிகள்

- அரசடிச் சந்திக்கும். 2 ஆம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;
- பிராமணக்கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின்அப்பாகம்;
- செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்;

02.பாதை மாற்றம்

- பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை சுவூய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி, நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச்சந்தையூடாகச்செல்லல்.
- பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடை செய்யப்படும்.

03.வாகனத் தரிப்பிடங்கள்

- முத்திரைச்சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்.
- கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்;
- அம்மன் வீதி, பருத்தித்துறை வீதிச்சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்;
- செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்

(கலாநிதி க.குணராசா),
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி.12513)


# தமிழீழ தேசியத்தொலைக்காட்சி

KU Band இல்

தினமும் தமிழீழ நேரம் இரவு 8.00 மணி முதல் 9.00 மணி வரை.




தென்கிழக்கு ஆசியாவிற்கு

ஆகஸ்ட் 1ம் திகதி முதல் ஒளிபரப்பாகிறது

தொழிநுட்பத் தகவல் :

Satellite : Europe Star (1) Ku 45°E
Azimuth : 258°
Frequency : 11056 Mhz
Symbol rate : 2.894MS/s
Polarity : Vertical
FEC : 3/4

தொடர்புகளுக்கு :

தமிழீழ தேசிய தொலைக்காட்சி,
தொடர்பகம்,
மத்திய கல்லூரி முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி.12502)

மின்னஞ்சல் : info@tamilntt.com T.P. No: 0212285816



. டில்லியில் நடந்த சீக்கிய கலவரத்தில் மத்திய அமைச்சர் ஜகதீஷ்டைட்லருக்கு தொடர்பு இருப்பதாக விசாரணை அறிக்கை கூறியதால் அவர் பதவி விலகக்கோரி பாராளுமன்றுக்கு வெளியே சீக்கிய எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# எல்லைப்பகுதியில் சண்டை நிறுத்தம் பாக்.-இந்தியா ஒருமித்து இணக்கம்

இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுணர்வை வளர்க்கும் வகையில் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக இந்தியா, பாகிஸ்தான் உயரதிகாரிகள் நேற்று முன்தினம் டில்லியில் கூடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்திய தரப்பில் வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் திலிப்சின்கா தலைமை தாங்கினார். பாகிஸதான் தரப்பில் அந் நாட்டு வெளியுறவுத்துறை செயலாளர் தாரிக உஸ்மான் ஹைடன் தலைமை தாங்கினார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது எல்லையில் சண்டை நிறுத் தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது என்று உறுதிசெய்யப்பட்டது. எல்லையில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத தில் புதிய பதவிகள் ஏற்படுத்தக் கூடாது என்றும், புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாதாந்த தேசியக் கொடி யேற்றும் கூட்டத்தை கார்பில்-ஓல்டிங், யூரி-சாக்கோதி, நவுஸ்சரா-சாதாபாத், ஜம்மு-சியால்காட் எல்லையோரப்பகு தியில் தொடர்ந்து நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. 1991ஆம் ஆண்டு செய்யப்பட்ட வான்வெளி விதிமீறல் ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பது என் றும் முடிவுசெய்யப்பட்டது.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு தீவிர பாதுகாப்புக்கள்

இந்தியாவின் 58 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொண டாடப்படுவதை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகத்தில் தமிழக முதல்வர் கொடி யேற்றுகின்ற இடம் தீவிர பாதுகாப்பு கண்காணிப்பில் உள்ளதாகத் தெரிகிறது. அத்துடன் சென்னை பகுதிகளில் தங்கி இருக்கும் பாகிஸ்தான் பிரஜைகள் அனைவரையும் இந்திய புலனாய்வுப் பிரிவினர் இரகசியமாகக் கண்காணித்து வருவதாக இந்திய பாதுகாப்புப் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காஷ்மீரில் ஒரே நாளில் வெவ்வேறு சம்பவங்களில் 12 பேர் பலி

காஷ்மீரில் கடந்த திங்கள் ஒரே நாளில் மூன்று சிறுமிகள் உட்பட 12பேர் இறந்தனர். கார்கில் மாவட் டம் பதாலிக் என்ற இடத்தில் தரை யில் கிடந்த வெடிகுண்டுகளை அறி யாமல் எடுத்தபோது குண்டுகள் வெடித்தன. இதில் எடுத்த மூன்று சிறுமிகளும் இறந்தனர்.

மேலும் தீவரவாதிகளை அழிக் கும் பணியில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குண்டுபட்டு இறந் தார். இதில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பதான் கோட்டைச் சேர்ந்த பார வூர்தி ஓட்டுநர் கண்ணிவெடியில் சிக்கி இறந்தார். மேலும் மூன்று பேர் தீவிர வாதிகளால் கொல்லப்பட்டனர்.

## நேற்றும் அமளி

சீக்கியர்கள் படுகொலை தொடர்பாக விசாணை நடத்திய நானாவதி ஆணைக்குழுவின் அறிக் கையில் மத்திய மந்திரி ஜெகதீஷ் டைட்லர் உட்பட பல்வேறு காங் கிரஸ் தலைவர்கள் மீது புகார் கூறப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டித்து பாராளுமன் றத்தில் தேசிய சனநாயகக் கூட்டணி யினர் நேற்று அமளியில் ஈடுபட்டனர்.

ஜெகதீஷ் டைட்லர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், பிரத மர் மன்மோகன்சிங் இராஜினாமாச் செய்யக் கோரியும் அகாலி தள உறுப்பினர்களும், பா.ஜனதா உறுப் பினர்களும் சபையின் மையப் பகுதிக்குச் சென்று கோஷமிட்டனர்.

இதனால் சபை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.



அண்மையில் தமிழகம் வண்ணாரப்பேட்டை பகுதியில் தமிழக முதல்வர் ஜெயலலிதா பொலிசாருக்கான வீடுகளை வழங்கி அதனைப் பார்வையிட்டபோது...

## தாஜ்மகால் யாருக்கு?

தாஜ்மகால் வக்பு வாரியத்துக்குச் சொந்தமானது என்று உத்தரப்பிரதேச மத்திய வக்பு வாரியம் அறிவித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த அறிவிப்பு ஆதாரமற்றது என்றும், சட்டவிரோதமானது என்றும் டில்லி மேல்-சபையில் மத்திய சமூக நிதித்துறை அமைச்சர் மீராகுமார் கூறினார். வக்பு வாரியத்தின் அறிவிப்பை எதிர்த்து தொல்லியல் துறை, உயர் நீதிமன்றில் முறையீடு செய்யும் என்று அவர் கூறினார்.

ஆனாலும் சம்பந்தப்பட்ட வக்பு வாரியத்தை கலைக்கவேண்டும் என்று முக்தார் அப்பாஸ் நக்வி (பா.ஜ) கூறிய யோசனையை மீராகுமார் நிராகரித்து விட்டார்.


## யாழ்ப்பாண மாநகரசபை
### சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிக்கும் சிலைகளுக்கான கேள்வி கோரல்

**யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிப்பதற்கான பின்வரும் சிலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

01. தமிழ் அன்னை – முழு மானிட அளவில், பீடத்தில் இருக்கும் பொழுது குறைந்தது 6' பெண் ஒருத்தி அமர்ந்திருப்பது போல் இருத்தல் வேண்டும்.
02. யாழ்.நங்கை – முழு மானிட அளவில் பீடத்தில் இருக்கும்பொழுது குறைந்தது பெண் ஒருத்தி அமர்ந்திருப்பது போல் இருத்தல் வேண்டும்.
03. யானை – முழு அளவில், அருகில் ஒரு கன்றுடன் கூடியதாக.
04. இடையில் நீர்க்குடத்தைத் தாங்கிய பெண் – முழு மானிட அளவில் குறைந்தது 6' அளவில்
05. குடத்தினைத் தோளில் வைத்து நீர் ஊற்றும் பெண் – முழு மானிட அளவில் குறைந்தது 6' அளவில்.
06. புற்றரையில் படுத்திருக்கும் இரண்டு புலிகள் – முழு அளவில்.
07. 20 கொக்குகள் -பல்வேறு நிலைகளில் அவற்றின் சரியான அளவுடன்
08. டைனோசர் – முழு அளவில்.

நிபந்தனைகள்:–

01. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அவற்றுக்கான மாதிரி வரை படத்துடன் கூறுவிலை தரப்படல்வேண்டும்.
02. கூறுவிலை கிடைக்கும் பட்சத்தில் அவற்றைக் கூறுவிலை பெற்ற திகதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் சுப்பிரமணியம் பூங்காவில் ஒப்படைக்க வேண்டும்.
03. சிலைகள் யாவும் தரமான சீமெந்தினாலும், கம்பிகளாலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
04. சிலைகளை உரிய இடத்தில் பொருத்தியபின் அதற்கான வர்ணங்கள் தீட்டி வழங்க வேண்டும்.
05. இவற்றுக்கான கூறுவிலை விண்ணப்பப்படிவங்களை 25.08.2005 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன் மாநகரசபை கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அன்று பி.ப 3.00 மணிக்கு அக்கேள்விகள் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். அவ்வேளை கேள்வி சமர்ப்பித்தவர்களும் சமுகமளிக்கலாம்.
06. விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300/= (வற்வரி நீங்கலாக) மாநகரசபையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
07. சமர்ப்பிக்கப்படும் மாதிரிப் படத்திற்கும் செய்யப்பட்ட சிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் அதனை நிராகரிக்கும் உரிமை மாநகர சபைக்கு உண்டு.

(கலாநிதி க.குணராசா)
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி.12514)



## பணிநிலை வேண்டுகை
### வட,கிழக்கு வன்றொழிநுட்ப அபிவிருத்தி நிறுவனம்

**உங்கள் எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக் கூடிய அரிய வேலை வாய்ப்புக்கள் உங்கள் தகைமைக்கு ஏற்றவாறான பல்வேறு வேலைகள் உங்களுக்காகவே காத்திருக்கின்றன.**


- அனைத்து வேலைகளுக்கும் மூன்று மாதம் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி நெறிக்காலத்திலேயே 6000.00 அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும்.
- ஆண்,பெண், இருபாலரும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.
- ஆண்டு எட்டுவரை கற்றிருத்தல் போதுமானது. கல்வித்தகைமைக்கு ஏற்ப வேறுபட்ட வேலைகள் வழங்கப்படும்.
- அகவை 18–32 இற்குள் இருத்தல் வேண்டும்.
- நேர்முக நாள்:– 17.08.2005 காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரை
  18.08.2005 காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரை.
- நேர்முக இடம்:– வி.விக்கினேஸ்வரன்,
  மு.கணேச வித்தியாலயம்,
  கைவேலி,
  புதுக்குடியிருப்பு.
- தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வில் அன்று கொண்டு வரவேண்டியவை:–
01. தேசிய அடையாள அட்டை.
02. பிறப்பு அத்தாட்சிப் படிவம்.
03. வேறு தகைமைச்சான்றிதழ்கள்.

(சி.12492)

**பதினேழாம் நாளுக்காக இன்றே தயாராகுங்கள்**

# பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடாததே தோல்விக்கு காரணமாக அமைந்தது-ராவிட்



பின் பகுதி வீரர்களின் மோசமான ஆட்டத்தால் இறுதிப்போட்டியில் தோல்வி அடைந்தோமென இந்திய அணி யின் தலைவர் ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற வாய்ப்பு இருந்தது. 200 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை மட்டுமே இழந்திருந்தோம். கைவசம் எட்டு விக்கெட்டுக்கள் இருந்தன. பின் பகுதி ஆட்டக்காரர்கள் சரியாக ஆடாததால் தோல்வி அடைந்தோம்.

சேவாக் சிறப்பான முறையில் அதிரடியாக ஆடி நல்ல தொடக்கத்தைக் கொடுத்தார். அவரைப் போல் யாரும் ஓட்டம் குவிக்கவில்லை. இலங்கை வீரர்கள் ஜெயவர்த்தனாவும், ஆர்னால்டும் மிகச் சிறப்பாக ஆடி 125 ஓட்டங்கள் சேர்த்தனர். இது அந்த அணி அதிக ஓட்டம் குவிக்க ஏதுவாக இருந்தது.


கடைசி பத்து ஓவர்களை சிறப்பாகப் பந்து வீசி இலங்கையின் ஓட்டக் குவிப்பைக் கட்டுப் படுத்தினோம். வேகப்பந்துவீச்சாளர் நெக்ரா அபாரமாக பந்து வீசினார். இவ்வாறு ராவிட் கூறினார்.

வெற்றி குறித்து இலங்கை அணித்தலைவர் கூறியதாவது;

சேவாக் ஆரம்பத்தில் ஆடிய விதம் எங்களுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அவரது விக்கெட்டை சிறப்பான முறையில் எங்களது பந்துவீச்சாளர் வாஸ் கைப்பற்றினார். நெருக் கடியான நிலையில் தொடர்ந்து எங்களது பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசினார்கள்.

இந்த வெற்றி அணியின் கூட்டு முயற்சியாலே கிடைத்தது. மேலும் போட்டியில் வெற்றி பெற திட்டமிட்டு ஆடினோம் இவ்வாறு அத்தப்பத்து கூறினார்.

# ஷேன்வோர்னுக்கு எதிர்பார்க்கும் அளவில் மூன்றாவது டெஸ்டில் விக்கெட்டுக்கள் விழாது



**- பீற்றர் மறன்**

இன்று ஓல்ட்ரப்பர்டில் ஆரம்பமாகும் ஆஷஸ் தொடரின் மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்னின் கைகளுக்கு எதிர்பார்க்கும் அளவில் விக்கெட்டுகள் கிடைக்காது என இங்கிலாந்தின் முன்னாள் வீரர் பீற்றர் மறன் தெரிவிக்கிறார்.

கடந்த போட்டியில் அவருக்கு விக்கெட்டுக்கள் கிடைத்தாலும் அதிலிருந்து இந்த ஆடுகளம் வித்தியாசமானது எனத் தெரிவிக்கும் மறன், இந்த மைதானத்தில் நடைபெற்ற எந்த ஒரு டெஸ்ட் போட்டியிலும் தாம் தோல்வியடையவில்லை எனத் தெரிவிக்கிறார். அன்று ஸ்ரோஸின் விக்கெட்டை அவர் முதல் போட்டியில் கைப்பற்றியதை ஏற்றுக்கொண்ட போதும் ஓல்ட்ரப்பர்ட் ஆடுகளம் கடுமையானது. புல் நிறைந்தது. ஐந்து நாட்களிலும் திருப்பு முனையை ஏற்படுத்தும் என்று கூறுகிறார்.

# சிம்பாப்வேயின் டெஸ்ட் அந்தஸ்து பறிக்கப்பட வேண்டும்-சிம்பாப்வே



"சிம்பாப்வே அணிக்கு வழங்கப்பட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட், அந்தஸ்தைப் பறித்து விடுங்கள்." இப்படிக் கோரிக்கை எழுப்பியிருப்பது மேற்கிந்தியத்தீவுகள் அல்ல. சிம்பாப்வேயேதான்.

முன்னணி வீரர்கள் இல்லாமல் சிம்பாப்வே கிரிக்கெட் அணி டெஸ்ட் போட்டிகளில் 'தமாஷ்' காட்டி வருகிறது.நியூசிலாந்துக்கு எதிராக, ஹராரே நகரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில், எண்ணி இரண்டே நாளில் வாரிச் சுருட்டிக் கொண்டு தோற்றுவிட்டது. இப்படி ஒரு வெற்றியை (இன்னிங்ஸ் மற்றும் 294 ஓட்டங்களை) நியூசிலாந்துக்காரர்களே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

டெஸ்ட் கிரிக்கெட்டில், ஒரே நாளில் இரண்டு முறை விளையாடி ஆட்டமிழந்த இரண்டாவது அணி என்ற சாதனையையும் படைத்திருக்கிறது சிம்பாப்வே. இந்த அணிக்கு வழங்கப்பட்ட டெஸ்ட் அந்தஸ்த்தை வாபஸ் பெறவேண்டும் என்று மேற்கிந்தியத்தீவுகள் பலவும் சர்வதேச கிரிக்கெட் சபையை வற்புறுத்தி வருகின்றன. ஹராரே டெஸ்டில் நடந்த கேலிக்கூத்தைப் பார்த்தபிறகு, மனம் வெறுத்துப் போய் சிம்பாப்வே காரர்களே இப்போது போர்க்கொடி உயர்த்திவிட்டனர்.

சிம்பாப்வே அரசு கட்டுப்பாட்டில் உள்ள ஹெரால்ட் நாளிதழில், அதன் விளையாட்டுப் பகுதி ஆசிரியர் லாரன்ஸ் மயோ எழுதியுள்ள கட்டுரையில்," முதல் டெஸ்ட் முடிந்த கையோடு, இரண்டாவது போட்டியையும் நடத்தியிருக்கலாம். சீக்கிரம் ஜெயித்துவிட்டு, ஜொலியாக நியூசிலாந்து வீரர்கள் ஊர்சுற்றிப் பார்க்கவாவது செய்வார்கள். டெஸ்ட் கிரிக்கெட்டுக்களுக்கு என்று ஒரு கௌரவம் இருக்கிறது. அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற குறைந்த பட்ச நலன்கருதியாவது டெஸ்ட் போட்டிகளில் இருந்து சிம்பாப்வே ஒதுங்கி இருக்கலாம். அல்லது, சர்வதேச கிரிக்கெட் அமைப்பு ஒதுக்கி வைக்க வேண்டும்." என்று எழுதியுள்ளார்.

# ஷேன்வோர்னின் பந்துவீச்சில் நிறையவே கற்றுக்கொண்டேன்



இங்கிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அன்ரூஸ்ரோஸ் எட்பஸ்டன் மைதானத்தில் ஷேன் வோர்னின் பந்து வீச்சில்தான் நிறைய கற்றுக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

வோர்ன் அப்போட்டியில் இரு இன்னிங்சிலும் ஸ்ரோஸின் விக்கெட்டை வீழ்த்தினார். அதனால் அதுபோன்ற தவறைத் தான் இன்றைய போட்டியில் செய்வதில்லை என்று கூறியுள்ள ஸ்ரோஸ் வோர்னின் பந்துக்கு முகம் கொடுப்பது பெரும் சவால் எனத் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் மக்ராத் பிரட்லீ பங்கேற்காது அவுஸ்திரேலியர்களுக்கு பாதிப்பு என்பதை ஸ்ரோஸ் மறுப்பதாகவும் அவ்வாறு யாரும் நினைப்பது தவறாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் ஒன்றுக்கு ஒன்று என்ற நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பிரெட்லீ ஆடுவது சந்தேகம்?



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ இங்கிலாந்திற்கு எதிராக மூன்றாவது டெஸ்டில் ஆடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது பிரெட்லீயின் காலில் காயம் ஏற்பட்டது. எனவே இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பிரெட்லீ ஆடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. அவுஸ்திரேலியா- இங்கிலாந்து இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகின்றது.

# நெடியகாடு இளைஞர் வி. கழகம் சம்பியன்

பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் 20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பொலிகண்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 19.5 ஓவர் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புருஷோத்மன் 25 ஓட்டங்களும், சூரி, தீபன் முறையே 11.10 ஓட்டங்களும் அதிகூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் தனுஷ் சுபாஸ் தலா இரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

79 என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் 17.2 ஓவர் நிறைவில் ஆறு இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. இதில் தனுஷன் 24, சுரேஷ் 10, கஜன் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். (கீ)

# முன்பள்ளி விளையாட்டு விழா

முல்லை பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழா கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முல்லை பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத் தலைவர் தே. சுரேஸ்குமார் தலைமையில் ஆரம்பமானது.

ஒலிம்பிக் தீபத்தினைப் புதுக்குடியிருப்பு பிரதேச மு.ப.க.மே. நிலைய இணைப்பாளர் ஜெயசீலி ஏற்றினார்.


சிறப்பாக இசையும், அசைவும் போட்டி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தை அளம்பில் அன்னை வேளாங்கன்னி முன்பள்ளியும், இரண்டாம் இடத்தை கள்ளப்பாடு முகிலன் போசாக்குப் பூங்கா முன்பள்ளியும், மூன்றாம் இடத்தை அளம்பில் பெனாசீர் முன்பள்ளியும், செல்வபுரம் ஜே.ஆர். [illegible] முன்பள்ளியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு மைதானம் கையளிப்பு

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வண்ணாங்குளம், உண்ணாப்புலவு, சிலாவத்தை ஆகிய இடங்களில் இடம் பெற்றன.

இந்நிகழ்வு மாலை 4.30 மணிக்கு சிலாவத்தை இடைத்தங்கல் முகாமில் இளையோர் செயற்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முதல் நிகழ்வாக அகவணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மைதானபெயர்ப்பலகையினை சேவாலங்கா முல்லை மாவட்ட இணைப்பாளர் கண்ணன் திரை நீக்கி வைக்க மைதானத்தினை இளையோர் விளையாட்டுக்கழகத்தலைவர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இதன்பின்னர் விளையர்ட்டுக் கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களை முல்லைமாவட்ட சேவாலங்கா இணைப்பாளர் கண்ணன் வழங்கிவைத்தார். இதனைத் தொடர்ந்து வண்ணாங்குளம் உண்ணாப்புலவு ஆகிய இடங்களிலும் விளையாட்டு மைதானங்கள் கையளிக்கப்பட்டன.




ஹெல்சின்கி உலக தடகள போட்டிகளில், பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டப்பிரிவில் உகாண்டா வீராங்கனை டோகஸ் இன்சிகுரு தங்கம் வென்றார். இந்த நாட்டைச்சேர்ந்த ஒரு வீராங்கனை சர்வதேசப்போட்டிகளில் தங்கம் வெல்வது இதுவே முதல்முறை.(அடுத்த படம் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பிரிவில் பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்டின் ஆரோனை முந்திக்கொண்டு தங்கம் வென்ற அமெரிக்காவின் லாரி வில்லியம்ஸ் (இடது).

# சுப்பராங் அணி சம்பியனானது

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான கால்பந்து இறுதிப் போட்டியில் விக்னேஸ்வரா அணியை எதிர்த்தாடிய சுப்பராங் அணி சம்பியனானது. நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில்இருஅணிகளும் போட்டி நேரத்தில் கோல் எதனையும் பெறாத நிலையில் சம்பியன் அணியை தெரிவு செய்வதற்காக பனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் சுப்பராங் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று சம்பியனானது.



## சிந்தனைக்கு



சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப்பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பெற்றோரின் பங்கு

அண்மைக்காலத்தில் அதிகரித்த வாகன விபத்துகளினால் பலர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இந்த வகையில், யாழ். பொற்பதி வீதியில் நேற்று முன்தினம் பாடசாலை மாணவி ஒருவரும் விபத்தில் மரணமடைந்துள்ளார்.

இலங்கையில் அண்மைக்காலத்தில் வீதி விபத்துக்கள் பொதுவாகவே அதிகரித்துக் காணப்படுவதாக இருப்பினும், யாழ். குடாநாட்டில் கூடுதலான அளவில் காணப்படுகின்றது. இவ் வீதி விபத்துக்களுக்குப் பொதுவான சில காரணங்களும், சில பிரதேசங்களுக்குரிய தனித்துவமான காரணிகளும் இருக்கவே செய்கின்றன.

இதில், யாழ். குடாநாட்டைப் பொறுத்து வீதிவிபத்திற்குப் பல்வேறு காரணிகளைச் சுட்டிக்காட்ட முடியும். இதில் பிரதான காரணிகளில் ஒன்று வாகனங்களின் அதிகரிப்பிற்கு ஏற்ப வீதிகள் விஸ்தரிக்கப்படாமையும், போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப் படாமையும். ஆகும்.

அதாவது யாழ். குடா நாட்டில் வீதிகள் பல பத்தாண்டுகளுக்கு முற்பட்ட அளவிலேயே இன்றும் உள்ளன. ஆனால், வாகனத்தின் பெருக்கமோ பல பத்து மடங்கு, ஏன் பல நூறு மடங்கு பெருக்கமடைந்துள்ளதும் எனலாம். இதனால் வீதிகளில் நெரிசல், போக்குவரத்திற்கு இடையூறு என்பன தவிர்க்கமுடியாதவையா கியுள்ளன.

அத்தோடு வீதிகள் ஒடுங்கியவையாக உள்ளமை காரணமாக வீதி ஒழுங்கு முறைகளைப் பேண முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை வன்னிப்பிராந்தியத்தில் வீதிகள் ஓரளவு அகலமான வையாக இருப்பினும் செப்பனிடப்படாமையால், போக்குவரத்திற்குத் தோதற்றவையாகவுமே காணப்படுகின்றன. இந்நிலையானது வீதி விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததொரு நெருக்கடி நிலையை உருவாகியுள்ளது எனலாம்.

இவை ஒருபுறமிருக்க அண்மையில் வீதிவிபத்துக்கள் அதிகரித்தமைக்கு முக்கியமான காரணியாக அமைவது இளம் வயதினர் வாகனங்களை ஓட்டுவதும், அதிக வேகமாக அவற்றைச் செலுத்துவதும் ஆகும். அதாவது இளவயதினரிடம் சொந்தமாகவும், இலகுவில் பெறக் கூடிய வகையிலும் பெருமளவு வாகனங்கள் இருப்பதும் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகிறது.

இளவயதினர் வாகனங்களைச் செலுத்தும்போது அவற்றை அதிக வேகத்தில் செலுத்த முனைகின்றனர். அடுத்ததாக அவர்கள் வீதி ஒழுங்குகளை நேர்த்தியாக அறிந்தவர்களாக இருப்பதில்லை. இதன் காரணமாக வீதி ஒழுங்குகளை இவர்கள் கடைப்பிடிக்கத் தவறுவதோடு வீதியில் செல்லும் ஏனைய வாகனங்களின் சமிக்ஞைகளை கவனத்தில் கொள்ளது வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

வாகன விபத்திற்குத் தனியாக ஒரு தரப்புத்தான் காரணம் என்பதல்ல. இரு தரப்பும் காரணமாக இருக்கலாம். ஆனால் ஒரு தரப்பு அன்றி இரு தரப்பே காரணமாக இருந்தாலும் விபத்துக்களில் பாதிப்புக்கள் தவிர்க்கப்பட முடியாதவையாகவே இருக்கும். அதுவும் ஒரு தரப்பிற்கும் ஏற்படலாம். இரு தரப்பிற்கும் ஏற்படலாம்.

ஆனால் சிறு வயதினர் வாகனங்களைச் செலுத்தும்போது ஒரு புறத்தில் வீதி ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படாமல் இருத்தல் கூடாது. மற்றொரு புறத்தில் அவர்களிடம் காணப்படும் அசட்டுத் துணிச்சல் இன்னொரு புறத்தில் காணப்படும் பதற்றம் என்பனவும் வாகன விபத்துக்களுக்கும், உயிரிழப்பிற்கும் காரணமாகின்றன.

இந்த நிலையில் வாகன விபத்துக்களுக்குத் தனியாக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதிகளில் நெரிசல், வீதி ஒழுங்குகள் பேணப்படாமை என்பது மட்டுமல்ல, தேர்ச்சியற்ற இளவயதினர் வாகனங்களை ஓட்ட முற்படுகின்றமையும் காரணமாகும் .இதனைச் சட்டம், ஒழுங்கு மூலம் தடை செய்ய முடியும். ஆயினும் அது உரிய முறையில் பேணப்படாத விடத்து இவ் விபத்துக்கள் தவிர்க்கப்பட முடியாதவையாகிவிடுகின்றன.

ஆகையினால், இவ் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியவர்களாக பெற்றோர்களே உள்ளனர். அதாவது குறைந்த வயதுடையோருக்கு வாகனங்களை வாங்கிக் கொடுக்கவோ அன்றி அவர்கள் வாகன;ங்கள் ஓட்டுவதற்கு அனுமதிக்கவோ கூடாது. அத்தோடு வாகனம் ஓட்டும் இளவயதினருக்கு எச்சரிக்கை கலந்த அறிவுரைகளை வழங்குதல் வேண்டும். அதுமட்டுமன்றி குறுகிய நேரத்திற்குள் பல பணிகளை முடிப்பதற்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல் கூடாது.

அதாவது விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும் தவிர்ப்பதில் பெற்றோரும் கணிசமான பங்காற்ற முடியும். அது தமது பிள்ளைகளுக்குத் தாமே பாதுகாப்பைத் தேடிக் கொடுப்பதாக இருக்கும். இதனைவிடுத்து இளவயது ஆசை எனக் கூறி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விளையின் சில வேளைகளில் பெற்றோரே அவர்களுக்கு ஆபத்தைத் தேடிக்கொடுத்தவர்கள் ஆகிவிடுவர்.




# நியாயமான நிபந்தனைக்கு அமைய விடுதலைப்புலிகளுடன் பேசத்தயார்

## - அமைச்சர் டி.டபிள்யூ குணசேகர கூறுகிறார்

(கொழும்பு)

நியாயமான நிபந்தனைகளுக்கு அமைய விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள் வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசு தயாராக இருப்பதாக சிறிலங்காவின் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.டபிள்யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ் வரன் எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போதே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அதன்மூலம் பெரும்பாலான மக்களின் விருப்பத் திற்கமைய அவநம்பிக்கையைத் தோற்கடித்து சனநாயக மற்றும் சட்டத்தை ஸ்தாபிக்கக் கூடியவகை யிலான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை இனப்பிரச்சினை யானது மிகவும் சிக்கல் மிக்க ஒன்றாகவே கருதப்படுகிறது.

இந்தப் பிரச்சினையால் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். நாடு பிளவுபடும் எல்லைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வைப் பெற்று அதன்மூலம் மக்களின் சனநாயக உரிமைகளைப் பாதுகாத்து நாட்டின் இறைமையை உறுதிப் படுத்தும் வகையில் இந்த விவகாரத் தைக் கையாள்வதையே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது முக்கிய பொறுப்பாகக் கருதுகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் கொண்டு நடத்தப்படும். பிரிவினை மற்றும் அரசியல் வன்முறையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிராகரிக்கிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# அரசின் கல்வி மறுசீரமைப்புக்கு எதிராக பல்கலை மாணவர் ஒன்றியம் ஊர்வலம்

## - ஆறுபேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் சிறிலங்கா அரசாங்கம் நடைமுறைப் படுத்தவுள்ள கல்வி மறுசீரமைப் பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஊர்வலத்தின் மீது சிறிலங்கா பொலிசார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சினை நடத்தியுள்ளதுடன் ஆறுபேர் கைது செய்யப்பட்டனர்.

கல்வி மறுசீரமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் களனி பல்கலைக் கழகத்திலிருந்து சனாதிபதி செயலகம் வரை ஊர்வலமாக வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந் தனர்.

எனினும் அவர்களின் ஊர்வலம் புறக்கோட்டை பொலிஸ் நிலையத் திற்கு அருகே பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பொலிஸ் தடையை மீறி மாணவர்கள் செல்ல முற்பட்டபோது பொலிசார் அவர்கள் மீது தண்ணீரை வேகமாக பாய்ச்சியுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்து கலைந்து சென்ற மாணவர்கள் மீண்டும் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனப் பாதையால் வரமுற்பட்ட போது பொலிசார் அவர்களின் மீது கண்ணீர் புகைக்குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தி அவர் களைக் கலைத்துள்ளனர்.

சுமார் மூவாயிரம் மாணவர்கள் அளவில் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

# மேல் கொத்மலை மின்திட்டத்திற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

## —— மலையக இளைஞர் மன்றம் ஏற்பாடு

(கொழும்பு)

மேல் கொத்மலை நீர்மின்சாரத் திட்டத்திற்கு எதிராக தலவாக் கலையில் சாகும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. மலையக இளைஞர் மன்றம் இந்தப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் சுமார் பத்து இளைஞர்கள் இன்று முதல் சாகும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக மலையக இளைஞர் முன்னணியின் தலைவர் சுதாகர் தெரிவித்துள்ளார்.

அரசியலுக்கு அப்பாற்சென்று தமது உயிர்களை பலிகொடுப்பதன் மூலமே மேல் கொத்மலை திட்டத் தினை நிறுத்தி மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# ரணில் அடுத்தவாரம் இந்தியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளார். இதன் போது அவர் இந்தியத் தலைவர் களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை நேற்றைய தினம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிம் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பிலே இந்தப் பேச்சுவார்த்தை அமைந்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

# மகளிர் படையணி மூத்த பெண் போராளிகள்

# ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின் மூத்த போராளிகள் நேற்று தமிழ் ஊடகவியலாளர்களைக் சந்தித்துக் கலந்துரையாடினர்.




நேற்றுக்காலை 10.30 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவினரின் நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த பெண் போராளியும், லெப்.கேணல் திலீபன் மருத்துவசேவையின் பொறுப்பாளரும் வைத்தியருமான தேவா அவர்கள் தமிழரசுக்கட்சி, தமிழர் விடு தலைக் கூட்டணி என்பவற்றின் அகிம்சைப் போராட்டங்களில் பெண்கள் எவ்வாறு பங்காற்றினர் என்பதைப் பற்றிய விளக்கத்தினை வழங்கினார். தொடர்ந்து காந்தரூபன் செஞ்சோலை சிறுவர் இல்லப் பொறுப்பாளரான ஜனனி தமது காலத்தில் அடக்குமுறையாளர்களின் அடக்குமுறைகள் எவ்வாறு இருந்ததென்பது பற்றியும் அதனை எதிர்ப்பதற்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட தாம் பின்னர் எவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தார் என்பது பற்றியும் அன்றைய சூழல் குறித்தும் விளக்கினார்.

அடுத்து அன்றைய சூழல் விடுதலைப்போராட்டத்தில் பெண்கள் இணைய வேண்டும் என்பதனை எவ்வாறு நிர்ப்பந்தித்தது என்பது பற்றியும், போராட்டத்தில் தாம் எவ்வாறு இணைந்துகொண்டோம் என்பது பற்றியும் ஆரம்பகால செயற்பாடுகள் பற்றியும், மூத்த போராளிகளான தீபா, தனுஜா, தமிழவள் ஆகியோர் விளக்கமளித்தனர். அத்துடன் பெண்கள் படையணியின் வளர்ச்சி, அவர்கள் சந்தித்த களங்கள் பற்றியும் இதன் போது விளக்கப்பட்டது. அடுத்து மூத்த பெண்போராளியான தாரணி அக்காலத்தில் மாணவர் அமைப்பாக இருந்து கொண்டு தமிழீழ விடுதலைப்போருக்கு எவ்வாறு பெண்களும் பங்காற்றினர் என்பதையும், சூழல் பெண்களை ஆயுதமேந்த எவ்வாறு தூண்டியதென்பதையும் விளக்கமாகக் கூறினார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரின் உத்தியோக பூர்வ ஏடான சுதந்திரப்பறவைகள் ஏட்டினை முதன் முதலில் வெளியீடு செய்த சத்தியபாமா அக்காலத்தில் இவ் ஏட்டின் தேவை எவ்வாறு உணரப்பட்டது. எவ்வாறு வெளியிடப்பட்டது போன்ற கருத்துக்களைக் கூறினார். போராளிகள் மலைமகளின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பல்வேறு தமிழ ஊடகங்களிலுமிருந்து பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் விடையளிக்கப்பட்டது. எதிர்வரும் 18 ஆம் நாள் மகளிர் படையணியின் 20 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

(ச,தீ)

## தமிழ்...

இந்தப் பாடசாலையிலேயே கற்று வெளியேறிய பழையமாணவர்கள் அதுவும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற மாணவர்களால் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தங்களுடைய தேசத்தினதும், கிராமத்தினதும் மக்களுடைய மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்காகவும் முன்னின்று உழைப்பதைப் பார்க்கின்றபோது எங்களுக்கு பெருமகிழ்வைத் தருகின்றது.

உண்மையில் எமது பாடசாலைகளும், கல்வியும் கடந்த கால யுத்தத்தினால் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றது. எமது பாடசாலைகள் அனைத்துமே அழிக்கப்பட்டு எமது கல்விச்செயற்பாடுகள் முற்றாக நசுக்கப்பட்டிருந்தன.

தனியே எமது மக்கள் மீது போரை மட்டும் திணிக்கவில்லை. அதனூடாக எமது மனிதவாழ்விற்கு அடிப்படையாக இருக்கின்ற ஆதாரங்களை அழித்தொழிக்கின்ற நடவடிக்கையிலும் சிங்கள தேசம் கூடிய கவனம் செலுத்தியது.

அதிலும் முதன்மையான ஒரு பக்கமாக எமது கல்விச்செயற்பாட்டை நசுக்குகின்ற செயற்பாட்டில் மிக மிகக் கவனம் செலுத்தினார்கள். தரப்படுத்தல் என்ற முறையைக் கொண்டு வந்து எமது மக்களுடைய கல்வியை சீர்குலைத்தார்கள்.

இருந்தாலும் போருக்குள்ளும் முகம் கொடுத்துக் கொண்டு கல்வியையும் மேம்படுத்துவதில் எமது தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் இருந்தார். அதற்காகத்தான் கல்விக்கழகம், மாணவர் அமைப்பு என்பவற்றை நிறுவி கல்விச் செயற்பாடுகளை சீர்குலைக்கவிடாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு அந்த செயற்பாடுகளில் தலைவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். ஒரு பக்கத்தில் போராட்டத்திற்கு முகம் கொடுத்து மறுபக்கத்தில் எமது மக்களுடைய வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான கல்வியையும், போராட்டத்தோடு சேர்ந்த கல்வியையும் முன்னெடுத்துச் செல்வதில் எமது போராட்டம் வளர்ச்சி கண்டது.

ஏனெனில் எமது தலைவர் ஒரு மிக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார். விடுதலை அடையப்போகின்ற தமது தேசத்திலே உலகத்திலே அறிவியல் மிக்க உயர்ந்த உன்னதமான வளர்ச்சி பெற்ற மக்களாக எமது மக்கள் இருக்கவேண்டும் என்பது அவருடைய இலட்சியம்.

இன்று பத்திரிகைச்செய்தியொன்றில் சிறிலங்கா கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அதாவது தாம் பலவீனமான சமாதானத்தை விரும்பவில்லையாம். அப்பலவீனமான சமாதானம் எது என்பதுதான் கேள்வி. இன்னொரு அரச உயரதிகாரி தெரிவிக்கிறார் இலங்கையினுடைய இறைமையை தாங்கள் பாதுகாக்க வேண்டும். இலங்கையினுடைய இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க என்னவிலையாவது கொடுக்கத் தயாராகவுள்ளதாகக் கூறியிருக்கிறார்.

இதில் நாம் ஒரு கேள்வியெழுப்ப விரும்புகிறோம். சிங்களதேசம் சொல்கின்ற இறைமையென்பது என்ன? தமிழ் மக்களுடைய வாழ்வுரிமையை இல்லாதொழிப்பதும் ஆக்கிரமிப்பை மேற்கொள்வதும்தான் சிங்கள தேசத்தின் இறைமையா? என்ற கேள்வியை கேட்கவிரும்புகிறோம்.

இலங்கைத்தீவு அமைதிப் பூங்காவாகத் திகழவேண்டுமானால் சிங்கள தேசம் தனது இறைமையை பாதுகாப்பதிலோ, சிங்களமக்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதிலோ நாம் இடையூறாக இருக்க மாட்டோம். ஆனால் எங்கள் தேசத்தில் எங்களுடைய மக்கள் இறைமையோடும் கௌரவத்தோடும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கான வழிவகைகளை எமது கையில் எடுத்தே தீருவோம் இதை ஒருபோதும் சிங்கள தேசம் தடுக்க முடியாது. தடுக்க முனைந்தால் இலங்கைத்தீவு ஒரு போதும் அமைதிப்பூங்காவாக இருக்க முடியாது. சிங்களதேசம் தமது இறைமையை பாதுகாத்துக் கொண்டு மகிழ்வாக இருக்க வேண்டுமானால் தமிழ் மக்களது இறைமை, உரிமை வாழ்வை சிங்களதேசம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தமிழ்மக்களது இறைமைக்காக நல்வாழ்வுக்காக எமது தலைவர் அவர்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கு தலைநிமிர்வை ஏற்படுத்தியுள்ளார்.

பலமான மக்கள் இனமாக நாம் உருப்பெற்றுள்ளோம். தமிழ்மக்களின் பலமான நிலையில்தான் சிங்கள தேசம் அமைதி வழிக்கு வந்தது.

தற்காலிக அமைதிச்சூழலை ஒரு பொறியாக வைத்துக்கொண்டு எமது மக்களின் போராட்ட பலத்தை சிதறடிப்பதில் அரசு தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இன்று கூட செய்திகள் வெளியானது. கருணா குழுவிடமிருந்தும், அவர்களுடன் இணைந்த ஆயுதக் குழுக்களிடமிருந்தும் ஆயுதங்களைக் களையமாட்டோம் என்று அரசு கூறுகிறது. அரசு எப்படி ஆயுதங்களைக் களைவது? ஆயுதங்களை ஏந்திவைத்திருப்பவர்களே அவர்கள் தானே.

இலங்கைப் படைகளுக்குள் தொவு செய்யப்பட்டவர்களை வைத்துக் கொண்டு தான் ஆயுதக்குழுக்கள் செயற்படுத்தப் படுகின்றன.

இவ் ஆயுதக்குழுக்களினால் போராளிகள், மக்கள் கொல்லப்படுகிறார்கள். யுத்த சூழலை உருவாக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆகவே இந்தக் கட்டத்தில் மீண்டும் மக்களை நாம் கேட்டுக் கொள்வது நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து அடுத்த கட்டத்திற்கு எங்கள் தலைவருக்கு வலுச்சேர்த்து, தலைவரின் கரத்தைப் பலப்படுத்தத் தயாராக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டு இன்று ஒரு முன் மாதிரியான செயற்பாடாக இந்தக் கல்லூரி திகழ்வதையிட்டு எமது தேசியத் தலைவர் சார்பிலும் எமது விடுதலை அமைப்பு சார்பாகவும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

(கு,08)

## பளை...

பளைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளரும் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றியதையடுத்து பயிற்சிகள் ஆரம்பமாகின. இன்றைய பயிற்சியின் முடிவில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா சிறப்புரையாற்றினார்.

கடந்த காலங்களில் சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான போரில் எல்லைப் படையினரின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்ததைக் கருத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்படவுள்ள போரினை எதிர்கொள்வதற்காக தமக்கு பயிற்சியினை வழங்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இப்பயிற்சியானது தொடர்ந்தும் நடைபெறவுள்ளதோடு தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ச.தீ 11)

## அம்பாறை...

லப்பட்ட இடத்திலிருந்து 300 மீற்றர் தொலைவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் முகாம் ஒன்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ரவுன் ஏசி ரக வாகனத்தில் காத்திருந்த ஆயுததாரிகள் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடாத்தியுள்ளனர். இதில் ஒரு போராளி அந்த இடத்திலேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாகவும் மற்றைய போராளியின் கைகளைப் பின்புறமாகக் கட்டிவிட்டு சுட்டுக்கொன்றதாகவும் சம்பவத்தை நேரில் கண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்ட வாகனத்தில் ஏறி காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாமிற்குள் சென்றதைத் தாம் கண்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சனாதிபதி

சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இரத்துச்செய்வதற்கான திருத்தங்களை அமைச்சரவையில் முன் வைத்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் குறித்த இணைந்த அமைப்பினர் விடுக்கவுள்ளனர். (32)

## போராளிகள்..

தயாமோகன் மற்றும் குயிலின்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பில் நேற்றுக்காலை அதிரடிப் படையினரால் இரு போராளிகள் கொல்லப்பட்ட கொடுமையான சம்பவங்கள் தடுக்கப்படவேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் இனி மேலும் தொடருமாயின் இப்போது நடைமுறையிலிருக்கும் யுத்த நிறுத்தத்தை எம்மால் கடைப்பிடிக்க முடியாது. அத்துடன் நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் சமாதானம் கேள்விக்குறியாகும் என விடுதலைப் புலிகளினால் எச்சரிக்கப்பட்டது.

மேலும் எமது போராளிகள் மீது நேற்றுக்காலை தாக்குதல் மேற்கொண்ட குழுவில் சிறிலங்கா பொலிஸ் சீருடையணிந்த மூவர் உட்பட ஒன்பது பேர் இருந்தனர் என விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆயுதக்குழுவில் காணப்பட்ட ஒன்பது பேரில் சாரதி உட்பட மூவர் சிறிலங்கா பொலிஸ் சீருடை அணிந்திருந்தனர். ஏனையோர் சிவில் உடையில் இருந்துள்ளனர்.

காஞ்சிரங்குடா சிறிலங்கா விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து 300 மீற்றர் தொலைவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆயுதக்குழுவினரின் வாகனம் மூன்று விசேட அதிரடிப்படை முகாம்களைக் கடந்தே சென்றுள்ளது போன்ற விபரங்களை எடுத்துக் கூறியதுடன், அந்த முகாம்கள் வழியாக செல்லும் பொதுமக்களையும், ஏனைய வாகனங்களையும் சோதனையிடும் படையினர் இவர்கள் பயணம் செய்த வாகனத்தை மட்டும் ஏன் சோதனையிடவில்லை?

ரி-56 ரக துப்பாக்கி இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படி சோதனையிட்டிருந்தால் அந்தத் துப்பாக்கி அவர்களின் கண்ணில் படவில்லையா? போன்ற வினாக்களையும் எழுப்பியிருந்தார்.

படையினரின் ஒத்துழைப்புடனே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இந்த விபரங்களை ஆதாரமாக வைத்துக்கூறினார்.

## புதுக்குடியிருப்பு...

அதிபர் பெ. க. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பநிகழ்வாக நேற்றுக்காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் இருந்து மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் மங்கல வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து பொதுச்சுடரினை புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் முதல் மாவீரனான லெப்.எட்வினின் தாயார் ஏற்றிவைத்தார்.

அடுத்து தமிழீழ தேசியக் கொடியினை முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றிவைக்க, கல்லூரிக் கொடியினை கல்லூரி முதல்வர் ஏற்றிவைத்தார்.

அதைத் தொடர்ந்து கலாச்சார மண்டபத்தின் பெயர்ப்பலகையினை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அடுத்து ஒரு கோடியே அறுபதாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொன்விழா ஞாபகார்த்த மண்டபத்தினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

மேடை நிகழ்வில் வரவேற்புரையினை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் பார்த்தீபன் நிகழ்த்தினார். அதனுடன் வரவேற்பு நடனமும் நடைபெற்றது.

தலைமையுரையினைத் தொடர்ந்து பொன்விழா வெளியீடான மலரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம்,கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கப் பொருளாளர் தவசீலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

நூலின் வெளியீட்டு உரையினை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. சரவணபவன் நிகழ்த்தினார்.

அடுத்து மத்திய கல்லூரியின் பழைய அதிபர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ச. கனகரட்ணம், சு. வினோநோகராதலிங்கம், வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோரின் உரை இடம்பெற்றது.

நிகழ்வின் சிறப்புரையினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார்.

நன்றியுரையினை லண்டன் பழைய மாணவர் சங்கச் செயலாளர் த.சிறிபாஸ்கரன் நிகழ்த்தினார். பொன்விழா நிகழ்வின் முதல்நாள் நிகழ்வின் முதல் அமர்வில் பெருமளவான கல்விச் சமூகத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் இரண்டாம் அமர்வு மாலை மூன்று மணிக்கு தொடங்கியது. இதன்போது பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்குரிய பரிசில்களை மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் வழங்கி வைத்தார். அதுபோல் இன்றும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளது என நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

(கு.08)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.